செம்மணி

நிலம் 3 துகள் 119 வள்ளுவர் ஆண்டு 2052, 29 ஐப்பசி - 04 கார்த்திகை 2022 வாரமலர் பக்கங்கள் 24

# தேர்தலை நடத்த வலியுறுத்தி கொழும்பில் போராட்டம்

அரச தலைவர் ரணில் விக்கிரம சிங்க தேர்தலை உடனடியாக நடத்த வேண்டும் என்று வலி யுறுத்தி கொழும்பில் வியாழக் கிழமை நூற்றுக்கணக்கானவர் கள் போராட்டம் நடத்தினர். கொழும்பு நகர மண்டபத்தின் முன்பாகக் கூடிய போராட்டக்கா ரர்கள், அங்கிருந்து ஹைட் பார்க் மைதானம் வரையில் ஊர்வலமாகச் சென்றார்கள். அரச தலைவர் ரணில் விக்கிரம சிங்க உடனடியாகத் தேர்தலை நடத்த வேண்டும் என்று அவர் கள் வலியுறுத்தினார்கள். தொழிற்சங்

பக்கம் 03

# வரப்பிரகாஷ் பகிடிவதை கொலை குற்றவாளிக்குத் தண்டனை உறுதி

## குற்றவாளி இல்லாத நிலையிலும் தூக்கில் போடுவதை உறுதிப்படுத்தித் தீர்ப்பு



பேராதனைப் பல்கலைக்கழக பொறியியல்பீட புதுமுக மாணவனாக இருந்த சமயம் பகிடி வதைக்குள்ளாக்கப்பட்டுப் படுகொலை செய்யப்பட்ட யாழ்ப்பாண மாணவன் வரப் பிரகாஷ் வழக்கில் குற்றவாளியின் தூக்குத் தண்டனையை உறுதிப்படுத்தியது மேன்முறையீட்டு நீதிமன்றம். பல்கலைக்கழகங்களில் நடைபெறும் பகிடிவதை தொடர்பாக இலங்கை முழுவதையும் உலுக்கிய சம்பவம் வரப்பிரகாஷ் கொலை. 1997இல் இடம் பெற்றது. யாழ்ப்பாணத்திலிருந்து பேராதனைப் பொறியியல் பீடத்திற்குத் தெரிவான வரப்பிர காஷை அதே பல்கலைக்கழகத்தில் அப்போது இரண்டாம் ஆண்டு படித்துக்கொண்டிருந்த மாணவர்கள் பகிடிவதைக்கு உள்ளாக்கினர். ஆடைகள் அனைத்தும்

பக்கம் 24

# மேலும் 3 இலங்கை வீரர்கள் ஸ்பெயினில் தப்பியோட்டம்

பன்னாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்வதற்காக வெளிநாடு செல் லும் இலங்கை விளையாட்டு வீரர் கள் அந்தந்த நாடுகளில் மாயமாகி அரசியல் தஞ்சம் கோர முயற்சிப்பது தொடர்கின்றது. இந்தத் தடவை அப்படி மூன்று வீரர்கள் தப்பியுள் ளனர்.

பக்கம் 03

# மின் கட்டணம் மேலும் உயரும்

இந்த மாதம் முதல் மின்சாரக் கட் டணம் மேலும் உயரவுள்ளது. எரி பொருள் விலையேற்றம் மற்றும் டொலர் விலையேற்றம் என்பன காரணமாக மின்சார சபை ஏற்க னவே தனது கட்டணங்களை அதிகரித்துள்ள நிலையில், ஐப் பசி (ஒக்டோபர்) முதல் நாள் தொடக்கம் சமூகப் பாதுகாப்பு வரி 2.5 சதவீதமும் கட்டணத்து டன் சேர்க்கப்படவுள்ளது என்று பொதுப் பாவனைகள் அதிகார சபை தெரிவித்துள்ளது.
அரசு கொண்டுவந்துள்ள புதிய சமூகப் பாதுகாப்பு வரியை அற வடுவதற்கு நடவடிக்கை எடுக் கும்படி நிதி அமைச்சு விடுத் துள்ள அறிவுறுத்தலின்படி மின் கட்டணத்துடன் வரியையும் சேர்த்துக்கொள்ளவுள்ளதாக அதி கார சபையின் தலைவர் ஜானக ரட்ணாயக்க

பக்கம் 02

# குருந்தூர்மலை காணிகளை விடுவிக்க அமைச்சர் பணிப்பு

முல்லைத்தீவு மாவட்டம், குருந்தூர் மலையில் விவசாயக் காணிகளை கைய கப்படுத்த தொல்பொருள் திணைக் களம் நடவடிக்கை எடுத்துவந்த நிலை யில் அவற்றை உரிய அரச அலுவலகங் களோடு கலந்துபேசி விடுவிக்குமாறு பௌத்தமத, சமயங்கள் மற்றும் பண் பாட்டு அமைச்சர் விதுர விக்கிரமசிங்க உத்தரவிட்டுள்ளார்.
அமைச்சுத் தொடர்பான தெரிவுக் குழுக் கூட்டத்தில் அவர் இந்தப் பணிப்புரைய விடுத்தார். இந்தக் கூட்டத்தில் குருந் தூர்மலையில் ஏற்பட்டுள்ள காணிப் பிரச்சினை தொடர்பாகவும் ஆராயப் பட்டது.
குருந்தூர்மலையில் சைவ மக்கள் வழி பாட்டில் ஈடுபட்டுவரும் நிலையில் அங்கு பழைமை

பக்கம் 03

செம்மண்
வாரப் பத்திரிகை
551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
மின்னஞ்சல்: shemman.redsoil@gmail.com
தொடர்பு எண்: 021 492 7781
உரிமை மற்றும் வெளியீடு: கிறீன் மீடியா கவுஸ் பிரை. லிட்
ஆசிரியர்: தே.பிரேமானந்த்

# நீங்கள் செய்யப்போவது என்ன சம்பந்தரே?

இலங்கையில் தமிழ், முஸ்லிம் மக்களுடைய பிரச்சினைகளுக்கு புதிய அரசமைப்பு மூலம் ஒரு வருட காலத்திற்குள் தீர்வு காணப்படும் என்று அரச தலைவர் ரணில் விக்கிரமசிங்க அண்மையில் தெரிவித்திருந்தார். அரசின் கொள்கை அறிக்கையாக நாடாளுமன்றத்திலோ அல்லது நாட்டு மக்களுக்கான அவரது உரையிலோ இந்தக் கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. அதன் பொருள் இது வரையில் இந்த விடயம் அரசின் கொள்கை முடிவு, அதாவது ஒட்டுமொத் ஆட்சியாளர்களதும் கொள்கை முடிவு அல்ல என்பதுதான்.
அப்படியிருந்தபோதும் அவரது கருத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் பேச்சாளருமான மதியாபரணம் ஆபிரகாம் சுமந்திரன் முதலில் வரவேற்றிருந்தார். அரச தலைவரின் கருத்துச் செயற்படுத்தப்படும்போது அதற்கு முழு ஒத்துழைப்பையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வழங்கும் என்றும் தெரிவித்திருந்தார். அதன் பின்னர் அதே கருத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரான நாடாளுமன்ற உறுப்பினர் இராஜவரோதயம் சம்பந்தனும் தெரிவித்திருந்தார்.
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆசீர்வாதத்தோடும் ஆதரவோடும் 2015ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட மைத்திரி - ரணில் ஆட்சியில் 2016ஆம் ஆண்டு முதல் நாடாளுமன்றம் அரசியல் மறுசீரமைப்புச் சபையாக மாற்றப்பட்டு புதிய அரசமைப்பு ஒன்றை உருவாக்குவதற்கான முயற்சி எடுக்கப்பட்டது. ஐக்கிய தேசியக் கட்சியும் சுதந்திரக் கட்சியும் இணைந்ததான அந்த அந்தக் கூட்டு அரசு தேசிய அரசு என்று அழைக்கப்பட்டது. அதன் கீழேயே அரசியல் மறுசீரமைப்புச் சபை புதிய அரசமைப்புக் குறித்து ஆராய்ந்தது.
அந்தச் சபைக்கான வழிகாட்டுதல் குழு ஒன்றும் நியமிக்கப்பட்டிருந்தது. அதில் நாடாளுமன்ற உறுப்பினர்களான சம்பந்தனும் சுமந்திரனும் உறுப்பினர்களாக இருந்தனர். அவர்களின் கருத்து உள்ளிடல்களுடன் வழிகாட்டுதல் சபை சிறந்த தெரிவுகளை அரசமைப்புச் சபையின் முன் வைத்தது. ஆனால், "கொஞ்சம் கொஞ்சமாக அரிக்கப்பட்ட" அந்தத் தெரிவுகள் அல்லது யோசனைகள் பின்னர் நீர்த்துப்போகச் செய்யப்பட்டன. முதல் கட்டத்தில் அந்த சிறப்பான யோசனைகளுக்கு இணக்கம் தெரிவித்த சுதந்திரக் கட்சியே அந்த யோசனைகள் வரைவாகத் தயாரிக்கப்படுகின்ற நேரத்தில் பின்வாங்கியது.
ஒற்றையாட்சி, பௌத்த மதத்திற்கு முக்கியத்துவம் உள்ளிட்ட தமிழர்களின் அடிப்படைக் கோரிக்கைகளோடு தொடர்புபட்ட விடயங்களில் தமது சிங்கள பௌத்த பெரும்பான்மைவாதத்தை விட்டுக்கொடுக்க அவர்கள் தயாராக இருக்கவில்லை. அதனால் புதிய அரசமைப்புக்கான அந்த முயற்சி வெற்றியளிக்கவில்லை. அத னைத் தமிழர்களில் பெரும் பகுதியினர் ஏற்கவுமில்லை. இந்த விடயத்தில் தலைமை தாங்கி,

# போதைப்பொருளை கட்டுப்படுத்த குடாநாட்டில் புதிய படைய அணி

## பலாலி தலைமையகம் நடவடிக்கை

யாழ்ப்பாணத்தில் போதைப் பொருள் பாவனை அதிகரித்திருப்பதாக ஊடகங்களில் செய்திகள் தொடர்ந்து வெளியாகி வருவதை அடுத்து, போதைப் பொருள் கடத்தல் மற்றும் பயன்பாட்டைத் தடுக்கும் வகையில் புதிய அதிரடிப்படைப் பிரிவு ஒன்று தரைப் படையின் யாழ்ப்பாணக் கட்டளையகத்தால் உருவாக்கப்பட்டுள்ளது.
யாழ். குடாநட்டிலுள்ள தரைப்படைகளுக்கான கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சந்தன விஜயசுந்தரவின் வழிகாட்டலில் இந்தப் புதிய பிரிவு உருவாக்கப்பட்டுள்ளதாக பலாலி படைத் தலைமையகச் செய்திக் குறிப்புத் தெரிவிக்கின்றது. இந்தப் படைப் பிரிவு தொடர்ச்சியான தேடுதல்கள், சோதனைகளை நடத்தும் என்றும் யாழ்ப்பாணத்தில் போதைப் பொருள் கிடைப்பதைத் தடைசெய்யும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்தோடு போதைப் பொருட்களைக் கொண்டு செல்பவர்கள், விற்பவர்கள், பயன்படுத்துபவர்களை இந்தப் பிரிவு கைது செய்யும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 15 வயது சிறுவனை சுட்ட காவல் அதிகாரி கைது

மாத்தறை மாவட்டம் திகாகொட காவல் நிலையத் தைச் சேர்ந்த அதிகாரியான உப ஆய்வாளர் கைது செய்யப்பட்டிருக்கிறார். தவறுதலாக இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் 15 வயதுச் சிறுவன் ஒருவன் காயமடைந்ததைத் தொடர்ந்து அவரைக் கைது செய்திருப்பதாகக் காவல் துறையினர் தெரிவித்னதர்.
நெருக்கடியான சூழலில் உப ஆய்வாளரின் துப் பாக்கி தவறுதலாக வெடித்ததில் சிறுவனுக்குக் காயம் ஏற்பட்டது என்று காவல்துறையினர் தெரிவிக்கின்றனர். ஆனால், சம்பவத்தைக் கண்டித்து அப்பகுதி மக்கள் காவல் நிலையத்தின் வெளியே குவிந்ததால் பதற்றம் நிலவியது. வேண்டுமென்றே அதிகாரி சுட்டார் என்று மக்கள் குற்றஞ் சாட்டுகின்றனர்.
சம்பவம் தொடர்பில் 55 வயதான காவல் அதிகாரியை உடனடியாகக் கைது செய்திருப்பதாக காவல்துறையினர் தெரிவித்தனர்.

## மின்...

தெரிவித்தார்.நாடாளுமன்றத்தில் புரட்டாதி (செப்டெம்பர்) 8ஆம் நாள் சமூகப் பாதுகாப்பு வரி பெரும்பான்மை உறுப்பினர்களின் ஆதரவுடன் நிறைவேற்றப்பட்டது. அரசின் வருமானத்தை அதிகரிக்கும் நோக்கத்துடன் இந்த வரி கொண்டுவரப்பட் டுள்ளது. ஆண்டுக்கு 12 கோடி ரூபாய்க்கு மேல் வரு மானம் ஈட்டும் இறக்குமதி, உற்பத்தி, சேவை வழங்கல், மொத்த விற்பனை, சில்லறை விற்பனை நிறுவனங்களுக்கு இந்த வரி விதிக்கப்படும். இதன் மூலம் அரசுக்கு ஆண் டுக்கு 14 கோடி வருமானம் கிடைக்கும் என்று எதிர்பார்க் கப்படுகின்றது.
மின்சார சபை கடந்த 9 ஆண்டுகளில் தனது கட்டணத்தை கடந்த ஆவணி மாத நடுப்பகுதியில்தான் 75 சதவீதத்தால் அதிகரித்தது. இப்போது மீண்டும் அதிகரிப்பென்பது பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ள மக்களை அது மேலும் மோசமாகப் பாதிக்கும்.

முன்னின்று, இறுக்கமான முடிவுகளை எடுத்து நாடாளுமன்ற உறுப்பினர்களை ஒரு கட்டுக்கோப்புக்குள் வைத்திருந்து காரியத்தைச் சாதித்திருக்கவேண்டியவரான ரணில் விக்கிரமசிங்க, இரட்டை அதிகார நிலையை (அரச தலைவர் - தலைமை அமைச்சர்) காரணங்காட்டி தனது பொறுப்பிலிருந்து நழுவினார். அதேபோன்று ரணிலைக் காரணம் காட்டி மைத்திரியும் தனது பொறுப்பிலிருந்து நழுவினார்.
இந்தப் பின்னணியில் அந்தப் புதிய அரசமைப்புக்கான முயற்சி முழுத் தோல்வியைத் தழுவியது. ஒற்றையாட்சி, பௌத்த மதத்திற்கு முக்கியத்துவம் போன்ற விடயங்களில் ஒருமித்த ஆட்சி, ஏனைய மதங்களுக்கும் சம அளவு முக்கியத்துவம் போன்ற புதிய வியாக்கியானங்களைக் கூறிக்கொண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உச்ச விட்டுக்கொடுப்புக்களைச் செய்தபோதும் அந்தப் புதிய அரசமைப்பை நிறைவேற்ற முடியவில்லை. ரணில் - மைத்திரி அரசின் பதவிக்காலத்தைப் பூர்த்தி செய்வதற்குக் கூட்டமைப்பின் ஆதரவைப் பெறும் உத்தியாக மட்டுமே அதன் பயன்படுத்தப்பட்டு முடிந்தது.
அவ்வாறு கூட்டமைப்பு ஏமாற்றப்பட்ட பின்னர் தற்போது மீண்டும் அதே காட்சிகள் அரசியலரங்கில் விரியத் தொடங்கியிருக்கின்றன. ஒரு வருடத்திற்குள் புதிய அரசமைப்பு என்று ரணில் தெரிவிக்கிறார். அதனை வரவேற்று முழு ஒத்துழைப்புத் தருவோம் என்று கூட்டமைப்பும் கூறுகின்றது.
இந்த இடத்தில்தான் வியாழக்கிழமை தன்னைச் சந்தித்த ஐரோப்பிய தூதுக் குழுவினரிடம் கூட்டமைப்பின் தலைவர் தெரிவித்த கருத்து மிக மிக முக்கியமானது. இலங்கை ஆட்சியாளர்கள் கடந்த காலங்களில் ஐரோப்பிய ஒன்றியத்திற்கும் பன்னாட்டுச் சமூகத்திற்கும் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை, இப்போதும் உங்களுக்கு வாக்குறுதிகளை அள்ளி வீசுவார்கள், அந்த வாக்குறுதிகளை நம்பி ஏமாந்துவிடாதீர்கள், இலங்கை அரசு கடந்த காலங்களில் வாக்குறுதியளித்த விடயங்களை நிறைவேற்றுவதற்கு உடனடியாக இறுக்கமான தீர்மானங்களை எடுங்கள் என்று வலியுறுத்தியிருக்கிறார் சம்பந்தன்.
அவர் சொல்வதில் எந்தத் தவறும் இல்லை. அத்தனையும் உண்மை. ஆனால், அவர் ஐரோப்பிய ஒன்றியத்திடம் கேட்ட, வலியுறுத்திய விடயத்தையே தமிழ் மக்களும் சம்பந்தனிடமும் கூட்டமைப்பிடமும் கேட்க வேண்டியிருக்கிறது.
ரணில் உங்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளையும் கடந்த காலங்களில் நிறைவேற்றவில்லை, ஏமாற்றியிருக்கிறார், இப்போதும் ஒரு வருடத்திற்குள் வாக்குறுதி என்று கதை விட்டிருக்கிறார். அதையெல்லாம் நம்ப முடியாது, கடைசியில் ரணில் ஏமாற்றுவார் என்று உங்களுக்கே தெரிகிறது; ஏனென்றால் அவர்களின் வரலாறே அதுதான். அப்படியிருக்கும்போது ரணில் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றவும் ஒரு வருட காலத்திற்குள் புதிய அரசமைப்பைக் கொண்டு வருவதற்கு ஆட்சியாளர்களை நிர்ப்பந்திக்கவும் கூட்டமைப்பு உடனடியாக எடுத்த இறுக்கமான தீர்மானம் என்ன? அதை எப்போது நடைமுறைப்படுத்துவீர்கள்? குறைந்த பட்சம் அப்படி ஒரு தீர்மானம் இருக்கின்றது என்றாவது மக்களுக்கு வெளிப்படுத்துவீர்களா?

## குருந்தூர்மலை...

வாய்ந்த -விகாரை இருந்ததாகத் தெரிவித்து, புதிய விகாரை ஒன்றும் அமைக்கப்பட்டு வருகின்றது. அந்தப் பகுதி தொல்பொருள் திணைக்களத்திற்குரியது என்று உரிமைகோரும் நிறுவனம் அதைச் சுற்றியுள்ள நிலப்பரப்புக்களையும் தன்வசப்படுத்த நிலஅளவையில் ஈடுபடுவதற்கும் நடவடிக்கை எடுத்திருந்தது.
இதற்குத் தமிழ் மக்களிடமிருந்த எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது. தமது விவசாயக் காணிகளை அபகரிக்கத் திணைக்களம் முயற்சிக்கின்றது என்று அவர்கள் குற்றஞ்சாட்டினர். எதிர்ப்புப் போராட்டங்களையும் நடத்தினர். இதைத் தொடர்ந்தே அமைச்சர் தெரிவுக் குழுக் கூட்டத்தில் இந்தப் பணிப்புரையை விடுத்தார்.
அந்தப் பகுதியில் ஏற்கனவே தொல்பொருள் திணைக்களத்திற்காக அளவை செய்யப்பட்ட நிலப்பகுதியைத் தவிர்த்து ஏனைய விவசாயப் பகுதிகளை விடுவிக்குமாறு அமைச்சர் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

---

## மேலும்...

ஸ்பெயினில் நடைபெற்று வரும் 23 வயதுக்குட்பட்டவர்களுக்கான குத்துச் சண்டைப் போட்டியில் கலந்து கொள்வதற்காகச் சென்ற இலங்கை வீரர்களில் மூன்று பேர் நாடு திரும்பவில்லை. அவர்கள் குறித்த தகவல்கள் எதனையும் தெரிந்துகொள்ள முடியவில்லை என்று அதிகாரிகள் கூறுகின்றனர்.
இலங்கை அணியில் இடம்பெற்றிருந்த 6 வீரர்களில் இருவர் ஐப்பசி 22ஆம் நாள் காணாமற்போயினர், அடுத்த நாள் மற்றொருவர் காணாமற்போனார் என்று இலங்கை குத்துச் சண்டைச் சம்மேளன அதிகாரிகள் தெரிவித்தனர். தமது பெயர் விவரங்கள் வெளியிடப்படுவதை அவர்கள் விரும்பவில்லை.
பன்னாட்டுப் போட்டிகளில் கலந்துகொள்வதற்காக மேற்குலக நாடுகளுக்குச் செல்லும் இலங்கை விளையாட்டு வீரர்கள் தப்பியோடும் தொடரில் நடந்துள்ள கடைசியான சம்பவம் இது. கடந்த ஆவணி மாதம் பொதுநலவாய நாடுகளின் விளையாட்டுப் போட்டிக்காக பிரிட்டனுக்குச் சென்றிருந்த இலங்கை வீரர்களில் 9 பேரும் அதிகாரி ஒருவரும் இப்படித் தப்பிச் சென்றிருந்தனர்.
விளையாட்டு வீரர்களுக்கு ஒதுக்கப்பட்ட இடத்திலிருந்து வீரர்கள் தப்பிச் சென்ற உடனேயே ஸ்பானிய அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டது. தப்பிச் சென்றவர்களில் இருவரின் கடவுச் சீட்டுக்கள் இன்னும் இலங்கை அதிகாரிகளின் கைகளிலேயே இருக்கின்றன. ஒருவரின் கடவுச் சீட்டை அவர் அதிகாரிகளிடம் இருந்து திருடிச் சென்றுவிட்டார் என்று கருதப்படுகின்றது.
விளையாட்டுக் களத்திற்குள் செல்லும்போது வீரர்கள் தமது கடவுச் சீட்டுக்களை தம்மோடு வைத்திருக்க வேண்டும் என்கிற நிபந்தனை இருப்பதால் அப்போது மட்டும் அது அவர்களிடம் கையளிக்கப்படும். ஏனைய நேரங்களில் அவை அதிகாரிகளின் பாதுகாப்பிலேயே இருக்கும்.

---

## தேர்தலை...

கங்களின் கூட்டுறவு மையம் மற்றும் ஒருங்கிணைந்த மக்கள் இயக்கம் என்பன இந்தப் போராட்டத்தை ஏற்பாடு செய்திருந்தன.

# மறக்க முடியா பிரம்படிக் கொலைகள்



கனடாவிலிருந்து கோபி

பிரம்படிப் படு கொலை நடந்து 35 வருடங்கள் ஆகிவிட்டன. 1987 ஆம் ஆண்டு ஜூலை 29 அன்று இந்திய - இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்திடப் பட்டது. அதில் தமிழர் ஒரு தரப்பாக இருக்கவில்லை. இந்தியத் தலைமை அமைச்சர் ரஜீவ்காந்தியும் இலங்கை அரசதலைவர் ஜெ.ஆர் ஜெயவர்த்தனவும் கைச்சாத்திட்ட ஒப்பந்தம் அது. அமைதிப்படை என்ற பெயரில் இந்தியப் படையினர் இங்கு இறக்கப்பட்டனர். தமிழருக்குச் சிங்களம் தெரியாது. சிங்களச் சிப்பாய்கள் என்ன கேட்கிறார்கள் என்று தெரியாது. தமிழர் என்ன சொல்கிறார்கள் என்று சிங்களப் படைகளுக்குத் தெரியாது. இந்தச் சூழலில் தமிழைத் தவிர இந்தியாவிலுள்ள சகல மொழிகளையும் பேசும் சிப்பாய்களை அமைதிப் படை என்ற பெயரில் களமிறக்கினார்கள். இது பனையால் விழுந்தவனை மாடேறி மிதித்ததுபோன்றதொரு நெருக்கடியாகும். நான் அப்போது யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவன்.

**மருத்துவபீட வளாகத்தில் அன்றிரவு உலங்கு வானூர்தி மூலம் இறக்கப்பட்ட இந்தியச்சிப் பாய்களையே புலிகள் சுட்டுக்கொன்றனர் என்று அறிந்தேன். அதில் இறந்து கிடந்த அனைவரும் சீக்கியர்கள்**

1987 ஒக்ரோபர் 10ஆம் திகதி யாழ். நகரப் பகுதியில் விடுதலைப் புலிகளுக்கும் இந்தியப் படையினருக்கும் முறுகல் நிலை ஏற்பட்டது என்றும் இந்தியப் படைச் சிப்பாய் ஒருவர் அசோக் ஹோட்டல் பகுதியில் வைத்துப் புலிகளால் சுடப்பட்டார் என்றும் அறிந்தேன். அன்று மாலை ஏழாலையில் இருந்த நண்பர் ஒருவரின் வீட்டில் தங்கினேன்.

அன்று இரவு முழுதும் கடுமையான போர்ச் சூழல் காணப்பட்டது. இந்திய உலங்கு வானூர்தி கள் தாறுமாறாகப் பறந்தன. சரமாரியான குண்டுச் சத்தங்கள் கேட்டன. யாழ்ப்பாணத்தில் என்ன நடக்கிறது என்று தெரியவில்லை. யாழ்ப்பாணப் பக்கம் சத்தம் கேட்கிறது என்று மட்டும் ஊகிக்க முடிந்தது.

### மருத்துவபீட வளாகத்தில் இந்தியச் சிப்பாய்களின் சடலங்கள்

மறுநாள் காலையில் பல்கலைக் கழகத்தை நோக்கிச் சென்றுகொண்டிருந்தபோது கொக்குவில் பகுதியில் பல்கலைக்கழக நண்பர்கள் சிலர் நின்றார்கள். மக்கள் அவலப்பட்டு அங்கு மிங்கும் ஓடுவதைக் கண்டேன். "இந்திய இராணுவத்தைச் சுட்டுப்போட்டுக்கிடக்காம்" என்று ஒருவர் கூறினார். அங்கு நின்ற பல்கலைக்கழக மாணவர்களுடன் மருத்துவபீட விளையாட்டு மைதானப் பகுதிக்குச் சென்றேன். அங்கு 15சடலங்கள் கிடப்பதைக் கண்டேன்.

மருத்துவபீட வளாகத்தில் அன்றிரவு உலங்கு வானூர்தி மூலம் இறக்கப்பட்ட இந்தியச் சிப்பாய்களையே புலிகள் சுட்டுக்கொன்றனர் என்று அறிந்தேன். அதில் இறந்து கிடந்த அனைவரும் சீக்கியர்கள். ஒருவர் 55வயது மதிக்கத்தக்க பெரிய உருவம். ஏனையவர்கள் மீசை அரும்பிய இளம் வயதினர். அவர்களது தலைப்பாகைகளுடனும் சிலர் தலைப்பாகை அவிழ்ந்து நீள முடியுடனும் காணப்பட்டனர். அப்போது இந்தியச் சிப்பாய்கள் எவரும் அந்தப் பகுதியில் இல்லை. பொதுமக்கள் அதிகம் பேர் இந்தியச் சிப்பாய்களின் சடலங்களைப் பார்த்து இனித் தமக்கு என்ன நடக்கப்போகிறதோ என்று பேசிக்கொண்டார்கள். வயதான சீக்கியச் சிப்பாயின் சடலம் வயிறு பிளந்து குடல் வெளியே கக்கியபடி கிடந்தது. சாவதற்கு முன் ஒரு கையில் முழங்கைக்குமேலாகத் துப்பாக்கிச் சூடு

பட்டி ருக்கிறது. அந்தக் காயத்தைத் தலைப்பாகைத் துணியால் இறுக்க மாகச் சுற்றியிருக்கிறார். அப்படியே குருதி உறைந்தவாறு கிடந்த அந்தச் சடலம் நரைத்த தாடியுடன் காணப் பட்டது.

சடலங்கள் கிடந்த இடத்தில் வளைந்த சிறிய மண்வெட்டிகள், மண்ணெண்னை நிரப்பிய சூழ் லாம்புகள், சிறிய சாக்குகள் எல்லாம் சிதறிக் கிடந்தன. அவர்கள் உலங்கு வானூர்தியிலிருந்து இறங்கியதும் மண் சாக்குகளை நிரப்ப முயற்சித் திருக்கிறார்கள். மருத்துவபீட மைதா னம் அப்போது செப்பனிடப்பட்டுக் கொண்டிருந்தது. சில இடங்களில் சுண்ணாம்புக்கற்களைத் தோண்டி எடுத்த சிறிய கிடங்குகள் இருந்தன. சுண்ணாம்புக்கல் நிறைந்த பகுதியாக இருந்ததால் இந்தியச் சிப்பாய்கள் நினைத்தபடி சாக்குகளில் மண்ணைக் கோலிக் கட்ட முடியவில்லை. சிலர் சிறிய கற்களை எடுத்து அடுக்கியபடி பள்ளத்துக்குள் இறந்து கிடந்தனர். ஒரு சிலர் சிறிய சாக்குகளில் ஓரளவு மண்ணை எடுத்து அடுக்கியிருந்தார் கள். அவர்களின் கையிலோ அரு கிலோ ஆயுதங்கள் எவற்றையும் காணமுடியவில்லை. இறந்து கிடந்த சிப்பாய்களும் தனித்தனியாக இறந்து கிடந்தார்கள். குறைந்தது 20மீற்றர் தூரத்தில் கிடந்தார்கள். தலைக்கவசம் அணியாத சிப்பாய்களை உலங்கு வானூர்தியிலிருந்து இறக்கக்கூடாது என்பது இராணுவ மரபாக இருந்த போதிலும் தலைப்பாகையுடன் இரு ந்த சீக்கியச் சிப்பாய்களை இறக்கியது தவறானது என்று பின்னர் அறிந் தேன்.

அங்கு இறந்துகிடந்த வயதான சீக்கியரைத் தவிர ஏனைய அனை வரும் இந்தியத் தலைமை அமைச்சர் ரஜீவ்காந்தியின் மகனான ராகுல்காந் தியின் அப்போதைய வயதில் இருந் தார்கள். அவரது மகனின் வயதிலி ருந்த இளம் சிப்பாய்கள் அந்தச் சண்டையில் பலியாகியிருந்தனர்.

சீக்கியர்களின் சடலங்களைப் பார்த் துக்கொண்டிருந்தபோது இந்திய வான்படை உலங்குவானூர்திகள் அந்தப் பகுதியில் சுற்றின. அந்த இடத்தைவிட்டுப் பிரம்படிப் பகுதி நோக்கிச் சென்றேன். அங்கு கண்ட காட்சிகள் இரத்தமும் சதையுமாக இப்போதும் ஞாபகம் இருக்கின்றன. அவ்வூரின் முக்கிய வீதிகளில் புலி கள் நிலக்கண்ணிவெடிகளைப் புதைத்திருப்பார்கள் என்று இந்தியச் சிப்பாய்கள் எதிர்பார்த்ததால் தமது டாங்கிகளை புகையிரதப் பாதை ஓரங்களூடாகச் செலுத்தி வந்திருக்கி றார்கள். அவற்றின் செயின்கள் ரயில் பாதையையும் வெட்டிச் சிதைத்தி ருந்தன. வீதிகளில் புல்டோசர் சங்கி லிகளின் அடையாளங்கள் தாறுமா றாகக் காணப்பட்டன. மழை பெய்தி ருந்ததால் எங்கும் சேறாகக் கிடந்தது.

பிரம்படி வீடுகளின் மதில்கள் உடைத்து விழுத்தப்பட்டுக் கிடந்தன. இந்திய டாங்கிகள் அங்கிருந்த தெருக் களில் ஓடாது மதில்களை உடைத்துப் புதிய பாதை அமைத்துச் சென்றிருப் பது தெரிந்தது. எங்கும் சடலங்கள் கிடந்தன. 10வயது மதிக்கத்தக்க ஒரு சிறுவன் முற்றத்தில் தலையில் ருந்த ஆவணங்கள் 3 சிறிய ஒளிப் படங்கள் ஆகியன அடங்கிய பெரிய என்வலப் ஒன்றையும் பார்த்தேன்.

இன்னோர் வீட்டு முற்றத்தில் பருத்த அம்மாவின் சடலத்தைக் கண்டேன். அந்தப் பெண்ணின் உடல்மீது முழுதுமாக டாங்கி ஏறியிருந்தது. உடல் சேற்றில் படிந்து கிடந்தது. இரண்டு கைகளும் சிதை யாமல் கிடந்தன. அந்தக் கைகளில் சிவப்பு நூலும், மஞ்சள் நூலும் கட்டப்பட்டுக் கிடந்தன. அந்தப் பெண் ணின் சடலம் செங்கை ஆழியான் எனப்படுகிற கலாநிதி குணராசாவின் உறவுக்காரராக இருக்கவேண்டும்.



துப்பாக்கிச் சூடு பட்டு இறந்து கிடந் தான். இடுப்புப் பகுதியில் டாங்கி ஏறிச் சென்றதால் கால்களும் உடலும் பிரிந்துபோய்க் கிடந்தன.

ஒரு வீட்டுக்குள் பருத்த பெண் தாய் ஒருவர் சுடப்பட்டுக் கிடந்தார். அவரது சடலம் குப்புறக் கிடந்தது. நெஞ்சுப் பகுதியில் பெண் குழந்தை ஒன்றின் சடலம் கிடந்தது. அந்த அம்மாவுக்கு நெஞ்சில் சூடு பட்டு வீட்டு விறாந்தையில் பெருமளவு குருதி படிந்திருந்தது. அந்த வீட்டில் மட்டும் 10பேருக்கு மேல் இறந்து கிடந்தார்கள். அதில் பல்கலைக்கழக மாணவர்கள் 4பேர் அடங்குவர். அதில் மூவர் எனக்குச் சிரேஷ்ட வகுப்புகளில் கற்றவர்கள். மன்னா ரைச் சேர்ந்த முஸ்லிம் மாணவர் ஒருவர் கட்டிலில் படுத்திருந்தபோது சுடப்பட்டுள்ளார். அந்த வீட்டுக்கு அன்று மாலையில்தான் அவர் வந் தார் என்றும் அடுத்த நாள் காலையில் பல்கலைக்கழகத்தில் தன்னைப் பதிவுசெய்வதற்காக அவர் வைத்தி அவரும் வேறு சிலரும் அங்கு நின் றதைக் கண்டேன். அதை மண்வெட் டியால் வளித்தெடுத்து ஒரு சிறிய தகரப் பெட்டியில் எடுத்துச் சென்ற தைக் கண்டேன். பிரம்படிக் கிராமத் துக்குள் பிரபாகரன் தங்கியிருக்கிறார் என்று அறிந்து உலங்கு வானூர்தி மூலமும் டாங்கிகள் மூலமும் இந்தி யப் படையினர் அந்தப் பகுதிக்குள் இறக்கப்பட்டனர் என்று பின்னர் அறிந்தேன். மக்கள் பயத்தில் தாறுமா றாக ஓடியதால் கண்ட இடமெல்லாம் கொல்லப்பட்டுக் கிடந்தார்கள். கண்ணால் கண்ட இந்த அவலச் சம்பவங்களை வாழ்நாளில் மறக் கவே முடியாது. அமைதிப்படை என்ற பெயரில் இறக்கப்பட்;ட இரா ணுவத்தாலும், போராட்ட ஒடுக்கு முறைகளாலும், போராட்டங்களாலும் இவ்வாறாக யார் யாரோ எல்லாம் கொல்லப்பட்டார்கள். இதற்குப் பிரம் படிப் படுகொலை ஓர் இரத்தச் சாட்சி.

# சிறைக்குள்...

தர்மராசா




## சிறைக் கூரை மீதிருந்து சிவனொளிபாத மலையைப் பார்த்தேன்

நான் சிறைப் பிடிக்கப்பட்ட பிற்பாடு வானமே எல்லை என்று இருக்கக் கிடைத்தது கூரை மீது ஏறி உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்ட அன்றுதான். சிறைக்குள் உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபடுவது என்பது துன்பமானதுதான். ஆனால் சிறைக்குள் அடைபடாது இருப்பதற்குக் கிடைத்த அந்தச் சந்தர்ப்பம் மிகவும் சுதந்திரமாக இருந்தது. கீழே சிறைக்குள் - தரையில் நிற்கும்போது அதுவரை எமக்கு உயரமாகத் தெரிந்த மதில்கள் இப்போது சிறியவையாகவும் ஒழுங்கற்றவையாகவும் கூனிக் குறுகி நின்றன.

களுத்துறைச் சிறைச்சாலைக் கூரை மீது 42 கைதிகள் ஏறி உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள், மேலும் பலர் உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபடவிருக்கிறார்கள் என்று களுத்துறை காவல்துறையினரை மேற்கோள்காட்டி அன்றிரவு சூரியன் எவ்.எம் வானொலி, பி.பி.சி. தமிழோசை வானொலிகளில் செய்திகள் வெளியாகின. அந்தச் செய்திகள் எமக்குத் திருப்தியைத் தந்தன. நாம் 25 பேர் கூரையில் ஏறியபின் சிறைச்சாலைக்குள் பெரிய மாற்றம் நிகழ்ந்துவிட்டது என்று வெளியுலகுக்குத் தெரிந்தது. இரவு முழுதும் சிவனொளிபாத மலை தெளிவாகத் தெரிந்தது. மலையில் பொருத்தப்பட்ட மின்விளக்குகள் ஒளிர்ந்து கொண்டிருந்தன. மல்லிகைப் பூச்சரம்போல வளைந்து வளைந்து அழகாகக் காட்சியளித்தது. காலையில் சூரியன் உதித்த பின்னர் சிவனொளிபாதமலை தெளிவாகத் தெரிந்தது.

16.4.2002 காலை 9 மணியளவில் கூரையிலிருந்து இறங்கி முகம் கழுவி விட்டு நண்பர்களுடன் கதைத்துவிட்டு மீண்டும் மேலே ஏறினோம். குளித்தால் உடற்சோர்வு ஏற்பட்டுவிடும் என்பதால் குளிக்கவில்லை. நாம் இறங்கியபோது அந்த எண்ணிக்கையை ஈடுசெய்ய வேறு பல கைதிகள் மேலே ஏறினார்கள். சிறை ஊழியர்கள் கணக்கெடுக்கும்போது கூரையில் நிற்பவர்களின் எண்ணிக்கை அதிகமாக இருந்தால் உணவு தவிரப்புப் போராட்டத்தில் மேலும் பலர் இணைந்துள்ளனர் என்று அர்த்தப்படுவதுபோல எண்ணிக்கை குறைந்தால் சிலர் போராட்டத்தைக் கைவிட்டார்கள் என்று அர்த்தப்பட்டுவிடும். எனவேதான் இந்த ஏற்பாட்டை மூத்த கைதிகள் சிலர் செய்தார்கள்.

சிறைக்கூரையிலிருந்து சிறுநீர் கழிக்க வசதியில்லை. பிளாஸ்ரிக் போத்தல்களில் சிறுநீரைக் கழித்து நூல், கயிறு மூலம் அதைக் கிழே இறக்கக் கீழேயுள்ள கைதிகள்

# மன்னார் ஊடாகப் புலிகள் கடற்பயணம் செய்யவிருந்தனர்

(சென்ற வாரத் தொடர்ச்சி)

கமலநாதன்

விசுவமடுப் பகுதியிலிருந்து கடல் மார்க்கமாக வெளியேறும் புலிகளின் திட்டம் முறியடிக்கப்பட்ட பின்னர் ரட்ணம் மாஸ்ரரின் தலைமையில் சதுப்பு நிலப் பகுதிகளுக்கு ஊடாக மன்னார் வரை சென்று (ஏனைய இடங்களில் படையினர் நிலைகொண்டிருந்தனர். அதனால் தப்பிச் செல்வதற்கு சதுப்புநிலத்தைத் தெரிவு செய்தார்கள்). பின்னர் அங்கிருந்து கடற்பயணம் செய்வது என்றும் அதற்குச் சார்ள்ஸ் அன்ரனிப் படைப் பிரிவு பாதுகாப்பு வழங்கும் என்றும் ஏற்பாடுகள் நடக்கின்றன என்று அறிந்தேன். சதுப்பு நிலத்தினூடாக வழித்தடங்களைப் பார்க்கச் சென்றப் புலிப் புலனாய்வாளரைக் கைதுசெய்தேன். அவரைப் பிடித்த பின் அந்தப் பயணத்துக்கான முழுத் திட்டத்தையும் அறிய முடிந்தது. இந்தத் தகவல்களை உடனடியாக 58ஆவது படைப் பிரிவைச் சேர்ந்த ஜெனரல் மார்க், ஜெனரல் கொஸ்த்தா, புலனாய்வுத் துறையைச் சேர்ந்த பிரிகேடியர் மஜீத் ஆகியோருக்கு அறிவித்தேன்.

**ரி-130 வானூர்தி சுட்டு வீழ்த்தப்படுவதைத் தடுத்தேன்**

இலங்கைப் படையினரிடம் ஒரேயொரு ரி-130 ரக வானூர்தி இருந்தது. இதில் 350-400பேர் வரை பயணிக்க முடியும். அதை வைத்துப் படையினரையும் ஆயுதத் தளவாடங்கள், பொருள்களையும் கொழும்பிலிருந்து பலாலிக்கு அனுப்பி வந்தார்கள். இந்த ரக வானூர்திகள் தொடக்கத்தில் படையினரிடம் 2 இருந்தன. அதில் ஒன்றைப் புலிகள் பலாலிப் பகுதியில் சுட்டு வீழ்த்தியிருந்தார்கள். எஞ்சியிருந்த மற்றைய வானூர்தியையும் சுட்டு வீழ்த்திவிட்டால் படையினரின் நகர்வுகளை முடக்க முடியும் என்பது புலிகளின் திட்டமாக இருந்தது.


கோப்புப்படம்

ராதா வான் படையைச் சேர்ந்த கரும்புலிகள் இருவர் வானூர்தியைச் சுட்டு வீழ்த்துவதற்குத் திட்டமிட்டிருக்கிறார்கள் என்று அறிந்தேன். தெல்லிப்பழையைச் சேர்ந்த ஒருவர் அதற்கான ஆயுதங்களைக் கிளாலிப் பகுதியில் மறைத்து வைத்திருக்கிறார் என்றும் அறிந்தேன். அந்த நபர் புலிகள் இயக்கத்தில் இணைந்து 6 வருடங்களின் பின்னர் அதை ஊற்றுவார்கள். இரவானதும் கூரையில் நின்றபடி சுதந்திரமாகச் சிறுநீர் கழித்த சம்பவங்களும் நடந்தன.

இந்த முறை உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்ட கைதிகளுக்குக் களுத்துறைச் சிறை நிர்வாகத்தினர் நல்ல ஒத்துழைப்பு வழங்கினார்கள். காலையில் சிறைச்சாலையைச் சுற்றிப்பார்க்க வந்த பிரதம ஜெயிலர் சாந்த பெனாண்டோ, "அரசியல்வாதிகள் வெறும் வாக்குறுதிகளை வழங்குகிறார்களே தவிர நீங்கள் விடுதலையாகுவதாக இல்லை. நீங்கள் கூரை மீது ஏறியிருப்பது நிர்வாகத்துக்குச் சிக்கலான விடயம்தான் எனினும் உங்களது விடுதலைதான் முக்கியம். முடிந்தவரை முயற்சி செய்யுங்கள்" என்று உற்சாகப்படுத்தினார்.

16.4.2002 அன்று காலை பத்து மணியளவில் டி பிரிவில் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த 3 கைதிகளைக் காவு தடிகளில் சிறைச்சாலை மருத்துவமனைக்குச் சுமந்து சென்றனர். அவர்களின் உடல் நிலை மோசமடைந்துள்ளதால் குளுக்கோஸ் ஏற்றப்பட்டது என்று அறிந்தேன். பி 1 பகுதியில் யசோ என்ற கைதி 10ஆம் திகதியே போராட்டத்தை தொடங்கியிருந்தார். அதுபற்றிப் பின்னர்தான் எனக்குத் தெரிந்தது அவரையும் சிறைச்சாலை மருத்துவமனைக்குக் காவிச் சென்றார்கள்.

உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும்போது கைதிகளின் உடல்நிலையைச் சிறை மருத்துவர் பரிசோதிப்பது கடப்பாடு. கைதிகள் தொடர்ந்து கூரைமீது இருப்பதால் அவ்வாறு பரிசோதிக்க முடிவதில்லை. கைதிகள் மயக்க நிலைக்கு வரும் போது போர்வையில் படுக்க வைத்து அதன் நான்கு மூலைகளிலும் கயிறு கட்டிக் கீழே இறக்குவார்கள். இவ்வாறான சூழ் நிலையில் சிறை ஊழியர்கள் படாதபாடு படுவார்கள். சிறிய ஏணிகளை வைத்து அதில் ஏறிக் கைதிகளை இறக்குவார்கள். போராட்டத்தில ஈடுபட்டிருக்கும் கைதிகள் உடல் நிலையில் பலவீனமாக இருப்பதால் மயக்கமடைந்தவரைக் கீழே இறக்கும் விடயத்தில் அவர்களால் உதவ முடியாத நிலை இருக்கும்.

(தொடரும்)



முதற் தடவை யாகத் தனது வீட்டுக்குச் சென்றார்.

அவரை நீண்ட நாள்களுக்குப் பின்னர் சந்தித்ததால் அவர் உயிருடன் இருப்பதையிட்டு அவரின் குடும்பம் பெரும் மகிழ்ச்சியடைந்தது. அதேவேளை அவர் ஏன் யாழ் குடாநாட்டுக்குள் வந்தார் என்பதை அறிந் ததும் வானூர்தியைச் சுடவேண்டாம் எனச் சகோதரிகளும், பெற்றோ ரும் மன்றாடியிருக்கிறார்கள். ஆமிதான் எங்க ளுக்குக் கொப்பி, புத்தகம், சாப் பாடு, மருந்து எல்லாம் தருகிறார்கள் வானூர்தியைச் சுட்டால் நாங்கள் உயிருடன் இருக்க முடியாது என்று கூறியிருக்கிறார்கள். வீட்டுக்காரர் கொடுத்த நெருக்கடி காரணமாக அந்த நபர் கடல் மார்க் கமாக இந்தியா வுக்குத் தப்பி ஓடினார் என்று அவரின் வீட்டை விசாரித்தபோது அறிந் தேன். புலிக் குடும்பம் ஒன்று படையினருக்கு ஆதரவாக இருந்திருக்கிறது என்பதை அறிந்து மகிழ்ச்சியடைந்தேன். அந்தக் குடும்பத்துக்கு உடனடியாக 10 ஆயிரம் ரூபா பணம் கொடுத் தேன்.

**தப்பி ஓடியவருடன் தொலைபேசியில் பேசினேன்**

அந்தக் குடும்பத்தினருடன் கதைத்து அவரது தொலைபேசி இலக்கத்தைப் பெற்று அவருடன் கதைத்தேன். உனக்கு எந்தப் பிரச்சினையும் கொடுக்க மாட்டோம் வானூர்தி எதிர்ப்பு ஆயுதங்களை மறைத்து வைத்திருக் கும் இடத்தைக் கூறுமாறு கேட்டேன். அந்த ஆயுதங்கள் கிளாலிப் பகுதியில் வீதி மைல் கல் ஒன்றுக்கு அருகில் புதைக்கப்பட்டிருக்கிறது, நீங்கள் கிளாலிக்குச் சென்று அந்தக் கட்டைக்கு அருகில் நின்று தொடர்பை ஏற்படுத்துமாறு கூறி னார். நாம் அங்கு சென்று தொடர்பை ஏற்படுத் தியபோது, கிலோ மீற்றர் கட்டையில் இருந்து குறித்த திசை ஒன்றைக் கூறி 150 மீற்றர் தூரத் தில் மஞ்சள் பூப் பூத்திருக்கும் மரத்துக்கு அரு கில் பழைய வீட்டின் அத்திபாரம் தெரியும், அந்த அத்திபாரத்தைச் செஞ்சிலுவைச் சங்க அடையாளம்போல கீறுங்கள் அதன் இடது பக்கத்தில் தோண்டினால் அந்த இடத்தில் ஆயு தங்கள் இருக்கும் என்றார். அதன்படி தோண்டி ஆயுதங்களை எடுத்தோம். அந்த ஆயுதங்களை எடுக்காதிருந்தால் வானூர்தி சுட்டு வீழ்த்தப்பட்டி ருக்கும். படையினர் பெரும் நெருக்கடியைச் சந்தித்திருப்பார்கள். அந்த நெருக்கடியைப் புத்திசாலித்தனத்தால் தவிர்த்துக்கொண்டோம். எதிர்ப்பு ஆயுதங்களைத் தேடி எடுத்ததற்காக எனக்கு மீண்டும் ரணசூர பதக்கம் வழங்கப்பட்டது.

எனது பணிக்காலத்தில் புலனாய்வுப் பணி யின் மூலம் அதிக தாக்குதல்களை தவிர்க்க முடிந்தது எனக்கு மகிழ்ச்சி. மாங்குளம் தாக்கு தல் ஒன்றில் எனது காலில் காயம் ஏற்பட்டது. 2018இல் மோட்டார் சைக்கிளில் எனது ஊரில் சென்றுகொண்டிருந்தபோது பின்னால் வந்த முச்சக்கரவண்டி மோதி விபத்துக்குள்ளானதில் தற்போது கால் நடக்க முடியாத நிலையில் சக் கர நாற்காலியில் காலத்தைக் கழித்து வருகி றேன் - இவ்வாறாகத் தனது அனுபவங்களைப் பதிவு செய்திருந்தார்.

# தேங்காய்ப் பூ லட்டு...!



இனிப்புணவுகளின் சுவையை அதிகப்படுத்தும் ஆற்றல் தேங்காய்ப்பூவுக்கு உண்டு. இதனால்தான் நவீன தயாரிப்புகளில்கூடச் சுதே சத் தெங்குப் பொருளான தேங்காய்ப்பூ முக்கிய இடத் தைப் பிடிக்கிறது. தேங்காய்ப்பூவைச் சேர்த்து பிஸ்கட் தயாரிக்கிறார்கள். தேங்காய்ப்பூ சேர்க்கப்பட்ட சொக்லெட் வகைகள் உண்டு. தேங்காய்ப்பூ சேர்க்கப்பட்ட இனிப்புகள் உண்டு. இத்தகைய தேங்காய்ப்பூ சேர்க்கப் பட்ட உணவு களுக்கு அடிமையான உணவுப் பிரியர்கள் பலருள்ளனர். அந்த வகையில் தேங்காய்ப்பூவைப் பயன்படுத்தி லட்டுத் தயாரிப்பது எவ்வாறு என்று இந்த வாரம் பார்ப் போம்.



சமையல்
சமையல்

**தேவையான பொருள்கள்**

தேங்காய்த்துருவல் - ஒரு தேங்காயினது. பசுப் பால் - ஒரு கப், சீனி - 100கிராம், கடலை மாவு - கால் கப் ஆகியன இதற்குப் போதுமானவை.


**எப்படிச் செய்வது...?**

பசுப்பாலைக் கொதிக்க வைத்து அதனுடன் சீனி மற்றும் தேங்காய்த்துருவல் ஆகியவற்றைச் சேர்த்துக் கலவை இறுக்கமாகும்வரைக் காய்ச்சிக் கொள்ளுங்கள். கட்டியாகும்போது கடலை மாவைச் சேர்த்து நன்கு கலந்து கொள்ளுங்கள். நன்கு கொதிக்கவிடுங்கள். பின்னர் இறக்கி ஆற வையுங்கள். ஆறியதும் உருண்டைகளாகப் பிடித் துப் பரிமாறுங்கள். தேங்காய்ப்பூ லட்டுகளின் ருசியை அறிவீர்கள்.

நட்சத்திரா

# ஏன்...? அப்டி...?

37



## ஆட்டுக்குடல் மாற்றுச் சிகிச்சை என்பது....?

எங்கள் ஊரில் சண்டியர் ஒருவர் இருந்தார். ஊர்ச் சண்டைகள், உள்ளூர்ச் சண்டைகள் என்றால் முன் களத்தில் நிற்பது அவராகத்தான் இருக்கும். சிங்கர் என்று செல்லப் பெயரும் இதனால் அவருக்குக் கிடைத்தது. சண்டியரான சிங்கருக்கு ஒரு தடவை வயிற்றில் கத்திக் குத்து நடந்துவிட்டது. மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டுப் பல காலம் சிகிச்சை பெற்றார். ஆள் உயிருடன் திரும்புவது கடினம்... அவசர சிகிச்சைப் பிரிவில் வைக்கப்பட்டுள்ளார்... குடலுக்குள் பாய்ந்த கத்தி அவரது குடலைக் கிழித்து விட்டது என்றெல்லாம் பேசப்பட்டது. பின்னர் அவருக்குக் குடல் மாற்றுச் சிகிச்சை செய்யப்போவதாகப் பேசப்பட்டது. சிகிச்சை பெற்ற சிங்கர் சிறிது காலத்தில் வீடு திரும்பினார். வீடு திரும்பிய சிங்கரைப் பார்ப்பதற்கு ஊரவர்கள் படையெடுத்தார்கள். சிங்கர் உயிர் பிழைத்ததற்கு அப்பால் அவரைச் சென்று பார்ப்பதற்கு வேறொரு காரணமும் இருந்தது. அவருடைய கிழிந்துபோன குடலை மாற்றி அவருக்கு ஆட்டுக் குடல் வைத்துத் தைக்கப்பட்டுள்ளது என்று கதைகள் பரவின. அதென்ன ஆட்டுக்குடல்...? ஆட்டுக்குடலை மனிதர்களுக்குப் பொருத்தமுடியுமா? ஆட்டுக்குடல் மனிதக் குடல்போல செயற்பாடுகளை முன்னெடுக்குமா? என்றெல்லாம் பலரும் சிந்திந்தார்கள். சிங்கர் ஆடுபோல கத்தாமலிருந்தால் சரி என்று நக்கல் பண்ணியவர்களும் உண்டு.

சரி... நாம் விடயத்துக்கு வருவோம். ஆட்டுக்குடலை மனிதர்களுக்குப் பொருத்துவது உண்மையா...? இது நவீன மருத்துவ வசதி பெருகியுள்ள காலத்தில் சாத்தியப்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. ஆனால், நம்மூர்ச் சிங்கருக்குப் பொருத்தப்பட்டது ஆட்டுக் குடல் அல்ல. செயற்கைக் குடலைப் பொருத்திய மருத்துவர்கள் அதுகுறித்துச் சிங்கரின் மனைவிக்கு ஆங்கிலத்தில் விளக்கமளித்தபோது, "ஆட்டிபிசிகல் இன்ரெஸ்ரைன்" என்று சொல்ல அதை அரைகுறையாக விளங்கிக் கொண்ட அவர் தனது மனிசனுக்கு ஆட்டுக்

குடல் மாற்றியிருக்கிறார்கள் என்று உறவினர்களுக்குச் சொல்ல அதுவே ஊர் முழுக்கப் பரவியிருந்தது. இவ்வாறாகச் சிங்கரின் விடயத்தில் மாத்திரமல்ல பல ஊர்களில் செயற்கைக் குடல் பொருத்தியவர்கள் இருக்கிறார்கள். செயற்கைக் குடல் என்பது ஆங்கிலத்தில் ஆட்டிபிசிகல் இன்ரெஸ்ரைன் என்று குறிப்பிடப்படுகிறது. அதுவே எம்மவர் மத்தியில் ஆட்டுக் குடல் என்பதாக ஆகியிருக்கிறது. மற்றும்படி இங்கு எவருக்கும் ஆட்டுக்குடல் மாற்றுச் சிகிச்சை நடக்கவில்லை என்பதே உண்மை. ஆட்டுக்குடல் மாற்றிய கதைகள் உண்மையா என்றும், அது சாத்தியமா என்றும் தேடிப்பார்த்தபோது ஏன் அப்படிப் பேசப்படுகிறது என்று இவ்வாறே விளக்கம் தெரிந்தது. மேலதிக விளக்கம் வேண்டுமாயின் நீங்களும் சற்றுத் தேடித்தான் பாருங்களேன்...!

---

# பயங்கரவாதமும் தடைச்சட்டமும்

**நியூட்டன்**

பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்கவேண்டும் என்று வலியுறுத்தி நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தலைமையில் மாவிட்டபுரத்திலிருந்து அம்பாந்தோட்டை வரை பொது மக்களிடம் கையெழுத்து வாங்கும் நடவடிக்கை ஒன்று அண்மையில் முன்னெடுக்கப்பட்டது. ஏற்கனவே ஒரு தடவை இதற்காக மக்களிடம் கையெழுத்துப் பெற்றிருந்த நிலையில் இரண்டாவது தடவையாகவும் பெற்றார் சுமந்திரன். இதுகுறித்துச் சமூக வலைத்தளங்கள் பல கேள்விகளை எழுப்பின. இலங்கையில் பெரும்பான்மை மக்கள் சிங்களவர். அவர்களால் அமைக்கப்படும் அரசுக்கு எதிராக முஸ்லிம்களும் தமிழரும் இணைந்து செயற்பட்டால்கூட 20வீதமளவான எதிர்ப்பு அல்லது ஆதரவுத் தளத்தையே பெற முடியும். நாடாளுமன்றில் தற்போதுள்ள 225 உறுப்பினர்களில் 120பேர் பயங்கரவாதத் தடைச்சட்டம் அவசியமானது என்று வாக்களித்திருக்கின்ற நிலையில் மிகச் சொற்பமான மக்களின் கையெழுத்துகளால் எந்தப் பிரயோசனமும் இல்லாதபோதும் அதைப் பெரும் திருவிழாபோல முன்னெடுக்கிறார் சுமந்திரன்.

**ஆரம்பத்தில் ஜே.வி.பி போராட்டக் காரர்களை அழிப்பதற்கு இந்தச் சட்டம் உதவியது. 1989இல் ஜே.வி.பியை ஒழிக்கவும், 2009இல் புலிகளை ஒழிக்கவும் இந்தச் சட்டம் பல்வேறு வழிகளிலும் அரசுக்கு உதவியது**

**கையெழுத்துப்போராட்டத்தை மக்கள் கண்டுகொள்ளவில்லை**

இந்தக் கையெழுத்துப் போராட்டம் மாவிட்டபுரத்தில் தொடக்கி வைக்கப்பட்டபோது முன்வரிசையில் சுரேஷ் பிரேமச்சந்திரனும் பின் வரிசையில் சித்தார்த்தனும் நின்றார்கள். இந்தியப் படையினருடன் இணைந்து செயற்பட்ட காலத்தில் சுரேஷ் பிரேமச்சந்திரன் செய்த பயங்கரவாதச் செயல்கள் பல. தமிழ் மக்கள் மீதே பயங்கரவாதச் செயற்பாடுகளை மேற்கொண்டிருந்த இவர்கள் பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்குமாறு கோருவது அவர்களால் செய்யப்பட்ட கொலைகளுக்கு எதிராக யாராவது எதிர்காலத்தில் நீதிமன்றை நாடினால் தாம் கைதுசெய்யப்படுவது, தண்டிக்கப்படுவதிலிருந்து தப்பிக்கொள்வதற்காகவே.

பயங்கரவாதச் செயற்பாடுகளால் தமது குடும்பத்தில் கொல்லப்பட்ட அனைவரும் பயங்கரவாதச் செயற்பாட்டில் ஈடுபட்ட எவரால் கொல்லப்பட்டார்கள் என்பது கொல்லப்பட்டவர்களின் குடும்பங்கள், உறவினர்களுக்குத் தெளிவாகத் தெரியும். உள்நாட்டிலிருந்தோ வெளிநாட்டிலிருந்தோ வழக்கொன்றைத் தாக்கல் செய்தால் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களில் பலர், முக்கிய பிரமுகர்கள் பலர் கைது செய்யப்பட வாய்ப்புண்டு. இதற்குத் துணைபுரியும் சட்டப் பலத்தைப் பயங்கரவாதத் தடைச்சட்டம் வழங்குவதால் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் இந்தச் சட்டத்தை விரும்புவர். இதனால் பெருமளவானோர் இந்தக் கையெழுத்துப்போராட்டத்தைக் கண்டுகொள்ளவில்லை.

**இலங்கையில் பயங்கரவாதம்**

இலங்கையில் அரச பயங்கரவாதம், ஆயுதக் குழுக்களின் பயங்கரவாதம் ஆகியன குறைவின்றி நடந்துள்ளன. அரச பயங்கரவாதம் தொடர்ந்தும் செயல்நிலையிலுள்ளது. கொலைகள், ஆட்கடத்தல்கள், மிரட்டல்கள்

# இரட்டைக் குடியுரிமையும் இலங்கை அரசியலும்

ரவீந்திரன்

இலங்கை வரலாற்றில் 22ஆவது சட்டத்திருத்தம் என்பது இரட்டைக் குடியுரிமை விடயத்தில் அதிக அக்கறை செலுத்தியிருக்கிறது. இரட்டைக் குடியுரிமையுள்ள இலங்கையர் அரசியலில் ஈடுபட்டால் என்ன? என்ற கேள்வி சாதாரண மக்களிடம் எழுகிறது. இரட்டைக் குடியுரிமை உள்ளவர் தேர்தலில் வென்றால் மக்களுக்கு ஏற்படக்கூடிய பாதிப்புகள் என்ன? என்பது சாதாரணமாக எழக்கூடிய கேள்விகளில் முக்கியமானது.

இரட்டைக் குடியுரிமை உள்ளவர் தனது தாய் நாட்டில் அரசியல் ஈடுபட்டு முறைகேடான வழிகளில் சொத்துகளைச் சேர்த்துத் தனக்குக் குடியுரிமை வழங்கியுள்ள மற்றைய நாட்டில் வைத்து அவற்றைப் பாதுகாக்க முடியும். உள்நாட்டில் அதற்கெதிராகச் சட்ட நடவடிக்கை எடுத்தால் அந்தச் சொத்துக்களுக்கான உத்தரவாதத்தைக் குடியுரிமை வழங்கிய மற்றைய நாடு வழங்கும்.

இலங்கையைப் பொறுத்தவரை இந்தப் பிரச்சினைக்கு முகம் கொடுத்தவர் பசில் ராஜபக்ச. அமெரிக்கக் குடியுரிமையைப் பெற்றிருந்த அவர் அரசியல் அதிகாரங்களைப் பயன்படுத்திப் பல சொத்துகளைத் தனதாக்கிக் கொண்டார் என்கிற குற்றச்Hட்டுகளுக்கு உள்ளானவர். பொருளாதாரா அபிவிருத்தி அமைச்சராக இருந்தபோது வெளிநாட்டு நிறுவனங்களின் தரகுப் பணத்தை அதிகளவில் பெற்றார் என்றும் சொல்லப்படுகிறது.

**நாட்டுப்பற்றில்லாதவர்கள்**

இரட்டைக் குடியுரிமையுள்ள அரசியல்வாதிகள் தமது இறுதிக் காலத்தைத் தமது சொந்த நாட்டில் அல்லாது குடியுரிமை பெற்ற நாட்டிலேயே கழிக்க விரும்புவதால் உள்நாட்டில் அரசியல் ஈடுபடும் காலத்தில் நாட்டுப்பற்று இல்லாதவர்களாகவே செயற்படுகின்றனர். இது மக்களின் எதிர்காலத்தைப் பாதிக்கின்றது. இவ்வாறானவர்கள் நாட்டின் மூல வளங்களான மணல், மரம், கனியவளங்கள், துறைமுகங்கள் எனப் பலவற்றையும் விலைபேசி விற்றுவிடுகிறார்கள். இதனால் அதையே நம்பியிருக்கும் சுதேச மக்களின் எதிர்காலம் கேள்விக்குறியாகிவிடுகிறது. குடியுரிமை பெற்ற நாட்டில் போய்த் தஞ்சமடைந்து சுகபோகமாக வாழும் நிலையில் அதிகாரத்தில் இருக்கும்போது




எனப் பல்வேறு வடிவங்கயில் இவை நடந்தன. ஆயுதக் குழுக்களின் பயங்கரவாதச் செயற்பாடுகளை ஒடுக்குவதாகத் தாம் செய்த கொலைகளை அரசு நியாயப்படுத்தியது. அரச பயங்கரவாதத்துக்கு எதிராகச் செயற்படுவதாகத் தமது செயலை ஆயுதக் குழுக்கள் நியாயப்படுத்தின.

இவ்விரு பயங்கரவதாங்களாலும் அரசுக்குச் சார்பானவர்களும் ஆயுதக் குழுக்களுக்குச் சார்பானவர்களும் மாறி மாறிப் பழிவாங்கப்பட்டனர். அரச பயங்கரவாதமானது இலங்கை அரசு, இந்திய அரசு ஆகிய இரண்டு அரச படைகளால் இங்கு முன்னெடுக்கப்பட்டது. இவ்விரு படைகளுடன் இணைந்து நின்ற தமிழ் ஆயுதக் குழுக்களாலும் நிகழ்த்தப்பட்டது. இவற்றுக்கு எதிராக நின்ற முக்கிய ஆயுதக் குழுவான புலிகள் இயக்கத்தாலும் நடந்தேறியது. ஆயுதக் குழுக்கள் தமக்குள் முரண்பட்டு மாறி மாறிக் கொலைகளை நிகழ்த்தின. 2004ஆம் ஆண்டு புலிகளுக்குள் ஏற்பட்ட முரண்பாடு காரணமாக (கருணாவின் பிரிவு) கொலைகள் நடந்தன.

**பயங்கரவாதத் தடைச்சட்ட அறிமுகம்**

அப்போதைய அரசதலைவர் ஜெ.ஆர் ஜெயவர்த்தனவால் 1979இல் கொண்டுவரப்பட்ட இந்தச் சட்டமானது மலேசியாவில் அரசுக்கு எதிராக எழுந்த போராட்டங்களை, கிளர்ச்சிகளை ஒடுக்குவதற்காகப் பயன்பட்ட சட்டமாகும். அதே வழிமுறையாகவே இலங்கையில் ஜெ.ஆரின் செயல் அமைந்தது. ஆரம்பத்தில் ஜே.வி.பி போராட்டக்காரர்களை அழிப்பதற்கு இந்தச் சட்டம் உதவியது. 1989இல் ஜே.வி.பியை ஒழிக்கவும், 2009இல் புலிகளை ஒழிக்கவும் இந்தச் சட்டம் பல்வேறு வழிகளிலும் அரசுக்கு உதவியது.

இப்போது பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்பட வேண்டும் என்று கையெழுத்துப் போராட்டத்தை நடத்துகின்ற சுமந்திரனைக் கொலை செய்யத் திட்டமிட்டவர்கள் என்று சிலரைச் சில காலங்களுக்கு முன்னர் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழேயே இலங்கை அரசு கைது செய்திருந்தது. இந்தக் கையெழுத்துப் போராட்டம் முடிந்த பின்னர் தனக்கும் சாணக்கியனுக்கும் உயிர் அச்சுறுத்தல் இருக்கிறது என்று சுமந்திரன் நாடாளுமன்றில் கூறியிருக்கிறார். இந்த நிலையில் அச்சுறுத்தல்காரர் களைக் கைது செய்வதற்குக்கூட இந்தப் பயங்கரவாதத் தடைச்சட்டமே மீண்டும் தேவைப்படலாம்.

அவர் எடுத்த முடிவுகளால் மக்கள் பாதிக்கப்படுகிறார்கள்.

2015இல் மகிந்த ராஜபக்ச அரசதலைவர் தேர்தலில் தோல்வியடைந்ததும் இரவிராகப் பசில் ராஜபக்ச நாட்டைவிட்டு வெளியேறித் தான் குடியுரிமை பெற்ற அமெரிக்காவில் தஞ்சமடைந்தார். இரட்டைக் குடியுரிமை விடயத்தில் எது நடக்கக்கூடாது என்று மக்கள் பக்கம்

**கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அவசரப்பட்டு அறிக்கை வெளியிட்டிருப்பது அவர் இரட்டைக் குடியுரிமை பெற்றவராக இருக்கலாம் என்ற சந்தேகத்தை ஏற்படுத்தியிருக்கிறது. அவ்வாறிருந்தால் இனிவரும் தேர்தலில் போட்டியிட முடியாத நிலை ஏற்படும்.**

சிந்திக்கவேண்டியிருக்கிறதோ அதைப் பசில் ராஜபக்ச செய்தார். அதேவேளை 2105இல் தேர்தலுக்கு முன்னரே இரட்டைக்குடி வைத்திருந்த கீதா குமாரசிங்க, சந்திரகுமார் ஆகியோர் அதை நீக்கிவிட்டுத் தேர்தலில் போட்டியிட்டனர்.

**19ஆவது திருத்தம்**

2015இல் நல்லாட்சி அரசின் காலத்தில் நிறைவேற்றப்பட்ட 19ஆவது அரசமைப்புத்திருத்தத்தில் மகிந்த குடும்பத்துக்கு எதிரான 2விடயங்களை ரணில்விக்கிரமசிங்க சேர்த்தார். இரட்டைக் குடியுரிமை உள்ளவர் தேர்தலில் போட்டியிட முடியாது என்பது அதில் முக்கியமானது. அமெரிக்கக் குடியுரிமை பெற்ற கோட்டாபய ராஜபக்சவைக் குறிவைத்து அதைப் புகுத்தினார் ரணில். அதன் பிரகாரம் 2019 அரச தலைவர் தேர்தலில் போட்டியிட்ட கோட்டாபய ராஜபக்ச தனது அமெரிக்கக் குடியுரிமையை விலக்கிக் கொண்டார். நீதிமன்றில் அதை உறுதிப்படுத்திய பின்னர் தேர்தலில் போட்டியிட்டார். 35வயதுக்குக் குறைந்தவர்கள் அரசதலைவருக்கான தேர்தலில் போட்டியிட முடியாது என்பது இரண்டாவது விடயம். நாமல் ராஜபக்சவை இலக்கு வைத்து 19ஆவது திருத்தத்தில் இதை முன்வைத்தார் ரணில். 2019இல் பதவிக்கு வந்த கோட்டாபய ராஜபக்ச 20ஆவது சட்டத்திருத்தத்தைத் தனது குடும்பத்துக்குச் சார்பாகக் கொண்டுவந்தார். பசில் ராஜபக்சவின் நாடாளுமன்ற வருகை. நிதி அமைச்சர் பதவி என எல்லாம் இலங்கை



அரசியலில் சர்ச்சையை ஏற்படுத்தின. இந்த நிலையில் இப்போது 22ஆவது அரசமைப்புத் திருத்தம் கொண்டு வரப்பட்டுள்ளது. உள்நாட்டில் சொத்துக்களை சூறையாடியும், விற்றும் பணம் சம்பாதிக்கும் நிலை ஆபத்தானது என்பதால் இது நியாயமானதும்கூட. இதையெல்லாம் செய்யும் பட்சத்தில் இரட்டைக் குடியுரிமை பெற்ற நபர் நாட்டைவிட்டு வெளியேற முடியாத நிலை இருப்பின் அவர் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு விசாரிக்கப்பட்டுத் தண்டனைக்குட்படுத்த வாய்ப்புண்டு.

**கஜேந்திரகுமாரின் எதிர்ப்பு**

22ஆவது திருத்தம் தமிழருக்கு எதிராகக் கொண்டுவரப்பட்டது என்று கஜேந்திரகுமார் பொன்னம்பலம் சொல்கிறார். இரட்டைக் குடியுரிமை பெற்ற தமிழர்கள் இலங்கையில் சுதந்திரமாகச் செயற்படவோ முதலீடுகளைச் செய்யவோ இடமிருக்காது என்கிறார். அதேவேளை நாடாளுமன்றில் இரட்டைக் குடியுரிமை பெற்றவர்கள் 10பேருக்கு மேல் உள்ளனர் என்று செய்திகள் அடிபடுகின்றன. அவர்கள் பதவி விலகவேண்டும் என்ற கோரிக்கையும் முன்வைக்கப்படுகிறது. இந்தப் பத்துப் பேரில் தமிழ் உறுப்பினர்களும் உள்ளடங்குகின்றனர் என்று கூறப்படுகிறது. தேர்தலில் போட்டியிட்டபோது இரட்டைக் குடியுரிமை உள்ள இவர்கள் 20திருத்தத்தின் பிரகாரம் தேர்தலில் போட்டியிட்டனர். இதனால் இவர்கள் பதவி விலகவேண்டியதில்லை என்ற வாதமும் முன்வைக்கப்படுகிறது.

கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அவசரப்பட்டு அறிக்கை வெளியிட்டிருப்பது அவர் இரட்டைக் குடியுரிமை பெற்றவராக இருக்கலாம் என்ற சந்தேகத்தை ஏற்படுத்தியிருக்கிறது. அவ்வாறிருந்தால் இனிவரும் தேர்தலில் போட்டியிட முடியாத நிலை ஏற்படும். இலங்கையில் பல்வேறு முதலீடுகளை வைத்திருக்கும் அவருக்குக் கொண்டு



# மறுபடியும் ஒரு வாக்குறுதி ...!

சத்தியநாதன்

அடுத்து வரும் 2வருடங்களுக்குள் அரசியல் தீர்வொன்றைத் தமிழ் மக்களுக்கு வழங்கவிருப்பதாகத் தற்போதைய அரசதலைவர் ரணில் விக்கிரமசிங்க கூறியிருக்கிறார். இதைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனும், பேச்சாளர் சுமந்திரனும் வரவேற்றிருக்கின்றார்கள். தற்போது அரசதலைவராக இருக்கின்ற ரணில் விக்கிரமசிங்க, தலைமை அமைச்சராக இருந்த நல்லாட்சிக் காலத்திலும், அதற்கு முன்னரும்கூட இவ்வாறான வாக்குறுதிகளை அளித்திருந்தார். அப்போதெல்லாம் தீபாவளிக்குத் தீர்வு, பொங்கலுக்குத் தீர்வு என்று கூறிவந்த சம்பந்தன் இப்போதும் அதே பாணியில் அடுத்து வரும் வருடங்களுக்குள் தீர்வு என்று சொல்ல முற்படும் நிலையிலேயே உள்ளார்.

தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு ஒன்றைப் பெறுவதே தமது நோக்கம் என்கின்றனர் சம்பந்தனும், சுமந்திரனும். 2015இல் ரணில் - மைத்திரி தலைமையிலான நல்லாட்சி அரசைக் கொண்டு வந்தது தாங்கள்தான் என்று கூறிய கூட்டமைப்பினர் அதன் நான்கரை வருட ஆட்சிக்காலத்தில் அரசியல் தீர்வு பற்றியோ, அரசியல் கைதிகளின் விடுதலை பற்றியோ, காணாமல் ஆக்கப்பட்டவர்கள் விடயத்திலோ எதையும் சாதிக்காவில்லை. மாறாக ரணிலுடன் ஒத்தோடினார்கள். தற்போது மேலும் இரண்டு வருடங்களுக்குச் சம்மதித்திருக்கிறார்கள். ரணிலின் வாய்ப்பேச்சளவான வாக்குறுதி பற்றிக் கடந்த காலங்களில் தமிழ் மக்கள் கேட்டுச் சலித்துப்போயுள்ள நிலையில் ஊடகங்களில் வெளியாகிய இதுகுறித்த செய்தியைக் கேலியும் கிண்டலுமாகப் பார்க்கிறார்கள்.

### ஒன்றிணைந்து தீர்மானம் எடுக்கும் நிலை இல்லை

தமிழருக்கான அரசியல் தீர்வு விடயத்தில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு மட்டும் தீர்மானங்களை எடுக்கக்கூடிய அளவுக்கு "ஏகப்பிரதிநிதிகள்" என்ற பலத்துடன் தற்போது இல்லை. 22 நாடாளுமன்ற உறுப்பினர்களை வைத்திருந்த கூட்டமைப்பு 2020தேர்தலில் அரைவாசியிலும் குறைந்த அளவில் 10ஆசனங்களை மட்டுமே

வரப்பட்டுள்ள அரசமைப்புத்திருத்தம் பேரியிடியாக அமைய வாய்ப்புண்டு. கட்சியின் தலைவர் தேர்தலில் போட்டியிட முடியாத நிலை ஏற்படும்போது அந்தக் கட்சி அரசியலில் இருந்து ஓரங்கட்டப்பட வாய்ப்புகள் அதிகம் உண்டு.

எது எவ்வாறிருப்பினும் சிங்களவர் தமக்கான அரசியலையும் தலைவர்களையும் தெரிவு செய்யும் விடயத்தில் முன்னேற்றம் கண்டிருப்பது தெரிகிறது. மகிந்த தரப்பை மீறி எதுவும் செய்துவிட முடியாது என்ற எண்ணம் 22ஆவது திருத்த வாக்கெடுப்பின் மூலம் நாடாளுமன்றில் தகர்த்தெறியப் பட்டிருக்கிறது. 22ஆவது அரசமைப்பு நிறைவேற்றத்துக்கு ஆதரவாக 150 வாக்குகளைக்கூடப் பெற முடியாது என்று கூறப்பட்ட நிலையில் 174 வாக்குகள் பெறப்பட்டிருக்கின்றன. மகிந்த குடும்பத்தைச் சேர்ந்த சமல் ராஜபக்ச, நாமல் ராஜபக்ச ஆகியோர் இதற்குச் சார்பாக வாக்களித்திருக்கிறார்கள். மகிந்த ராஜ போன்ற முக்கிய நபர்கள் வாக்களிப்பில் இருந்து ஒதுங்கிக் கொண்டமையானது ரணிலுக்குக் கிடைத்த பிரத்தியேக நாடாளுமன்றப் பலம் என்றே கொள்ள முடியும்.

வைத்திருக்கிறது. கிழக்கு மாகாண அரசியலில் முடக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் ரணில் விக்கிரமசிங்க 2வருடங்களில் தீர்வு என்றொரு அறிக்கையை விடுத்ததற்குக் காரணம் உண்டு. நாடாளுமன்றில் எஞ்சியுள்ள 2வருட காலப்பகுதிக்குள் தீர்வுத் திட்ட விடயத்தில் பன்னாடுகளுக்கு எதையாவது சாட்டுப்போக்குக்குக் காட்டவேண்டியிருப்பதால் இவ்வாறு அறிக்கைவிட்டுள்ளார். அதேபோல அடுத்து வரும் தேர்தலில் உள்ளதையும் இழக்காதிருப்பதற்காகத் தமிழ் மக்களுக்கு எதையாவது காட்டவேண்டியிருப்பதால் அதை வரவேற்பதாகச் சம்பந்தனும், சுமந்திரனும் கூறியுள்ளனர். ரணிலின் அறிக்கையின் பின்னர் நாம் அதை ஆதரிக்கிறோம் என ஒரு வசனத்தில் முடிவெடுக்கும் விடயமல்ல தமிழருக்கான அரசியல் தீர்வுத் திட்டம். முதலில் தமிழ்க் கட்சிகள் இணைந்து பேசி ஒருமித்த முடிவைத் தமக்குள் எடுக்க வேண்டும். அதற்கான முன்னெடுப்புகள் எதையும் கூட்டமைப்பு முன்வைக்கவில்லை.

**இறுதிப்போர் விசாரணைக்குப் பன்னாடுகள் தேவை**

இறுதிப்போர்க் குற்ற விவகாரங்களை விசாரிப்பதற்கு உள்நாட்டுப் பொறிமுறை போதாது பன்னாட்டு விசாரணையே அவசியம் என்று சொல்கின்ற சம்பந்தன் தீர்வுத் திட்ட விடயத்தில் உள்நாட்டுப் பொறிமுறை போதுமானது என்று நம்புவது எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல. தமிழ் அரசுக் கட்சியைத் தோற்றுவித்த தந்தை செல்வா, பண்டா - செல்வா, டட்லி - செல்வா ஒப்பந்தம் என்று இரண்டு ஒப்பந்தங்களில் மூக்குடைபட்ட அனுபவமும் நல்லாட்சிக் காலப் பின்னடைவும் இருக்கும் நிலையில் அரசியல் தீர்வுக்கு ரணில் தலைமையிலான உள்நாட்டுப் பொறிமுறை போதுமானது என்று கூறுவது மிகுதி இரண்டு வருட நாடாளுமன்ற பதவிக் காலத்தைப் பாதுகாக்கவும் தமிழ் மக்களுக்குப் புதிய கதை ஒன்றைச் சொல்லவும் ரணிலுக்குச் சாதகமான பன்னாட்டுச் சூழலைப்பாதுகாக்கவுமே உதவும். ரணிலால் விளையும் ஆதாயங்களை வேண்டுமானால் இவர்கள் அடைவதைத் தவிர வேறு எதையும் மக்களுக்குப் பெற்றுக் கொடுக்கப்போவதில்லை. இதை அறிந்துகொள்வதற்கு 2வருடங்கள் வரை காத்திருப்போர் முட்டாள்கள் ஆக்கப்படுவர் என்பதே உறுதி.



# தாய்மொழியை எப்படிக் காத்தது ஃபின்லாந்து?

02

விஜய் அசோகன்

மனித உரிமைகளின் அடிப்படையில் எல்லா மனிதர்களுக்கும் பொதுவானது கல்வி. அதோடு, மானுடவியல், சமூகவியல், பொருளியல் மேம்பாடுகளுக்கான அச்சாணியாகவும் அது திகழ்கிறது. பாலின சமத்துவத்தின் கருவியாகவும், சமூக அமைதிக்கான அச்சாரமாகவும், தனி மனிதர்களின் வாழ்வியல் மேம்பாடுகளுக்கானதாகவும் கல்வியே மாபெரும் சக்தியாக விளங்குகிறது!

இப்படித்தான் விவரிக்கிறது 'பன்னாட்டுக் கல்விக் கூட்டாண்மை'யின் வரையறை.

ஐக்கிய நாடுகள் சபையில் 1948இல் நிறைவேற்றப்பட்ட 26ஆவது சட்டப் பிரிவின்படியும், உலகளாவிய மனித உரிமைப் பிரகடனத்தின்படியும், 'அனைவருக்கும் கல்வியை வழங்குவதும் அனைவரும் கல்விப் பெறுவதும் அடிப்படை உரிமை. கல்விக்கான முதலீடே எல்லாவற்றையும்விட சிறந்த முதலீடு!'

**ஏன் இந்தச் சுட்டல்?**

இது போன்ற விஷயங்களை ஏன் இங்கே சுட்ட வேண்டியிருக்கிறது என்றால், நாம் கல்வி சார்ந்து செய்யும் ஒவ்வொரு செலவின்போதும் இதை நினைவில் கொள்ளவேண்டி இருக்கிறது. இப்படியான மதிப்பீடுகளைக் கொண்டு செயல்பட்டதால்தான் ஃபின்லாந்து இன்று உலகம் பேசும் கல்வி கேந்திரமாக நிற்கிறது.

தம் நாட்டின் கல்வித் துறைச் செயல்பாடுகளில் ஒவ்வொரு காலகட்டத்திலும் சிறு சிறு மாற்றங்களைப் படிப்படியாக நிறைவேற்றினார்கள் ஃபின்லாந்து நாட்டினர். இன்றும் இந்த மாற்றங்கள் ஏனைய நாடுகளைக் காட்டிலும் வேகமாகத் தொடர்கிறது.

ஃபின்லாந்து ஏற்கனவே சிறப்பான கல்வியை வழங்கி உலகின் முதன்மை இடத்தில் இருக்கும் நிலையில் ஏன் மாற்றங்களை உள்ளடக்கிக்கொண்டே ஓடுகிறார்கள்? இதற்கு அவர்கள் சொல்லும் பதில்: 'உலகம் மாறிக்கொண்டே செல்கிறது. உலக ஓட்டத்தின் வேகத்



“ எழுத்து, வாசிப்பு, கணக்குகள் கற்றலோடு, கிறிஸ்துவம் தொடர்பான அடிப்படை புரிதல்களைக் குழந்தைகளுக்குக் கொடுக்கும் வகையில் அந்தக் காலகட்டத்தின் பாடத்திட்டம் வகுக்கப்பட்டிருந்தது. ”

தோடு நாமும் இணையாவிட்டால், எங்கள் குழந்தைகளின் எதிர்காலம் சுணங்குவதோடு, நாட்டின் வளர்ச்சியும் சுருங்கிவிடும்!'

**மதமும் கல்வியும்**

ஏனைய கிறிஸ்துவ / ஐரோப்பிய நாடுகளைப் போல, ஸ்வீடனிலும் பின்லாந்திலும் கி.பி. 12ஆம் நூற்றாண்டில் இருந்து கி.பி. 1850 வரை, கல்விச் செயல்பாடுகளின் கட்டுப்பாடு தேவா லயங்களிடம்தான் இருந்தது. 15ஆம் நூற்றாண்டு காலகட்டத்தில்தான், பைபிளை வாசிப்பதற் கான கல்வியறிவு எல்லா குடிநபர்களுக்கும் உரியதா னது. ஃபின்லாந்தும் அனைவருக்குமான கல் வியை இந்தப் பின்னணியில் இருந்தே தொடங் கியது.

தேவாலயங்களில் திருமணம் செய்வதற்கான அடிப்படைத் தகுதியாக கற்றல் அறிவுச் சான்றி தழ் இருந்தது.

மார்ட்டின் லூதுரிடம் கற்றவர் பேராயர் மைக் கேல் அகிரிகோல. பிற்காலத்தில் பைபிளை பின்லாந்தின் தாய்மொழியான ஃபின்னிஷ் மொழியில் கி.பி. 1548இல் இவர்தான் கொண்டுவந்தார். அதுவரை சமூக மொழியாக ஃபின்னிஷ் தொடர்ந்திருந்தாலும், ஃபின்னிஷ் மொழியைப் பேசுவது இரண்டாம் தரமாகவே பார்க்கப்பட்டது. நிர்வாக மொழியாக ஸ்வீடிஷ், பேராலய மொழியாக லத்தீன் இருந்து வந்தன.



வீட்டு வழக்கிலும், கதை கூறலிலுமே இருந்த ஃபின்னிஷ் மொழிக்கு, மைக்கேல் அகிரிகோலவின் படைப்பின் வழி ஒரு திறப்பு ஏற்பட்டது.

ஆனாலும், கிட்டத்தட்ட 600 ஆண்டுக ளாக ஸ்வீடன் நாட்டின் ஆதிக்கத்தில் பின் லாந்தின் பெரும் பகுதிகள் இருந்ததால், தொடக்கக் கல்வி மொழியாக ஸ்வீடிஷ் உயர்கல்வி மொழியாக கிரேக்கம், லத்தீன் ஆகியவையே தொடர்ந்தன.

**கற்பித்தலுக்கான உத்வேகம்**

குழந்தைகளுக்கான கற்றல் திறன், குறிப்பாக, வாசிப் புத்திறனை உருவாக்குவதில் பெற்றோர் களுக்குத்தான் பொறுப்பு உண்டு என்கிற விதிகள் கடைப்பிடிக்கப்பட்டு வந்தன. குழந்தைகளின் திறனை சோதனை செய்யும் பணியை பாதிரி யார்கள் மேற்கொண்டனர்.

17ஆம் நூற்றாண்டில் இருந்து, கிறிஸ்தவப் பேராலயங்களை நிர்வகிக்கும் அதிகாரிகளும் ஆசிரியர்களும் கிராமங்கள் தோறும் குழந்தைக ளின் கற்றல்திறன் வளர்ப்புக்காக நியமிக்கப்பட் டனர். எழுத்து, வாசிப்பு, கணக்குகள் கற்றலோடு, கிறிஸ்துவம் தொடர்பான அடிப்படை புரிதல் களைக் குழந்தைகளுக்குக் கொடுக்கும் வகையில் அந்தக் காலகட்டத்தின் பாடத்திட்டம் வகுக்கப் பட்டிருந்தது. கற்பித்தலுக்குக் கூடுதல் முக்கியத் துவம் அளிக்கப்பட்டது.

இத்தகைய மாற்றங்களால், 18ஆம் நூற்றாண் டில் 50% பேர் 19ஆம் நூற்றாண்டில் 80%-90% பேர் எனும் அளவுக்கு கல்வியறிவு பெற்றவர்க ளின் எண்ணிக்கை ஃபின்லாந்து சமூகத்தில் அதிகரித்தது.

**கல்வி மொழியும் விடுதலை உணர்வும்**

1809 வரை ஸ்வீடிஷ் கட்டுப்பாட்டில் இருந்த பின் லாந்தை, ரஷ்யப் படை கைப்பற்றியது. ரஷ்ய அரசில் ஃபின்னிஷ் அமைச்சகம் என்று ஒரு பிரிவு உருவாக்கப்பட்டு, அங்கிருந்து ஆட்சி நிர்வாகம் கவனிக்கப்பட்டது. ரஷ்யாவின் ஆக்கிரமிப்பினால், ஃபின்லாந்து கல்வி முறை யானது ரஷ்யாவின் கல்வித் துறைக் கோட் பாட்டின்படி இயங்கலானது. இப்போது ஸ்வீடிஷ் மொழியில் இருந்து ரஷ்ய மொழியாகக் கல்வி மொழி மாற்றமடைந்தது.

இப்படி ஸ்வீடிஷ், ரஷ்ய மொழிகளின் ஆக் கிரமிப்பில் இருந்த பின்லாந்தின் ஃபின்னிஷ் மொழியைக் காப்பாற்றியதில் பின்லாந்தின் ஆசிரியர்களுக்குப் பெரும் பங்கு உண்டு. ஃபின் லாந்து சமூகத்தில், கதைசொல்லிகளுக்கு முக்கிய மான இடம் இருந்தது. அவர்கள் 'கலெவாலா' என்றொரு காவியத்தை ஃபின்னிஷ் மொழியில் சொல் வார்கள். மக்களோடு மக்களாக அமர்ந்து





# சர்தார்

## நல்ல முயற்சி

விளம்பரப் பிரியராக இருக்கும் காவல்துறை ஆய்வாளர் விஜய் பிரகாஷ்(கார்த்தி), தன்னையும் காவல்துறையையும் அடிக்கடி டிவிட்டர் டிரெண்டிங்கில் வைத்திருப்பவர். உளவுத்துறையின் முக்கிய ஃபைலை திருடியதாக சமூக ஆர்வலர் சமீரா தாமஸை (லைலா) தேடி செல்லும் கார்த்தி, அதைக் கண்டுபிடித்தால், இன்னும் அதிகமாக டிரெண்ட் ஆகலாம் என நினைக்கிறார். அதைப் பின் தொடரும்போதுதான், தண்ணீர் மாஃபியா, தேசத்துரோகி என முத்திரைக் குத்தப்பட்ட தன் தந்தை 'சர்தார்' யார் என்பது உள்பட பல விஷயங்கள் அவருக்குத் தெரிய வருகிறது. பிறகு அவர் என்ன செய்கிறார் என்பதுதான், படம்.

'இரும்புத்திரை', 'ஹீரோ' படங்களை இயக்கிய பி.எஸ்.மித்ரன் இதில், ஸ்பை த்ரில்லர் பின்னணியில் தண்ணீர் மாஃபியா பற்றி தரமாகச் சொல்லியிருக்கிறார். 'ஒரே நாடு ஒரே குழாய்' விஷயங்களும் தண்ணீர் தனியார்மயமானால், என்னென்னப் பிரச்சினைகளைச் சந்திக்க நேரும் என்

அவர்கள் சொல் லும் கதைகள் வழி இந்த ஆக்கிரமிப்புக் கால கட்டத்தில் ஃபின்னிஷ் மொழி உயிர்த்திருந்தது. ஆசிரியர்களும் இப்படி கதைசொல்லிகளாகச் செயல்பட்டுவந்தனர்.

இதன் பின்பு படித்தவர்கள் மத்தியில், ஃபின்னிஷ் மொழிப் பேச்சுவழக்கத்தை உருவாக்க ஸ்னேல்மென் உள்ளிட்டோர் போராடினர். சமூக மொழியாக மட்டுமில்லாமல், கல்வி மொழியாகவும் ஃபின்னிஷ் இருக்க வேண்டும் என்ற குரல்களும் எழலாயின.

ஃபின்னிஷ் தேசிய உணர்வெழுச்சிப் போராட்டக் காலங்களில் ஒலிக்கப்பட்ட பாடல்களில் ஒன்று, 'நாங்கள் ஸ்வீடிஷ் இல்லை, ரஷ்யர்களாக மாற முடியாது, ஆகவே நாங்கள் ஃபின்னிஷாக மட்டுமே இருக்க முடியும்!'

### மொழிக்கு முக்கியத்துவம்

ஆகையால், ஃபின்லாந்து தாங்களே தங்களை ஆண்டு கொள்ள ஆரம்பித்த பின் உருவாக்கிய முக்கியமான மாற்றங்களில் ஒன்று, ஃபின்லாந்து மொழியை ஃபின்லாந்து நாட்டின் ஆட்சிமொழியாக்கி சட்டம் இயற்றியது ஆகும். தாய்மொழிவழிக் கல்வியின் முக்கியத்துவத்தை அவர்கள் நிலைநாட்டினர். இதன் பின்னரே, தாய்மொழிக் கல்வி அடிப்படையில் ஸ்வீடிஷ் மொழிக்கும் ரஷ்ய மொழிக்கும் மாற்றாக ஃபின்னிஷ் மொழி பள்ளிக்கூடங்களில் இடம் பெறலாயிற்று.

ஒரு சமுகத்தில் தாய்மொழிக் கல்விக்கும் தேசிய இறையாண்மை உணர்விற்கும் உலக வரலாற்றில் எப்பொழுதும் பெருந்தொடர்பு இருக்கும். ஃபின்லாந்து வரலாற்றிலும், ஸ்வீடிஷ் ஆக்கிரமிப்பும் ரஷ்ய ஆக்கிரமிப்பும் கற்றுத் தந்தப் படிப்பினையின் பின்னர், மொழியையும் தனித்த பண்பாட்டையும் காக்க வேண்டிய சூழலுக்கு நகர்ந்திருக்கிறார்கள்.

தேசிய உணர்வெழுச்சி மலர்ச்சிப் பெற்ற, ஃபின்னிஷ் மொழி ஆட்சிமொழியாக்கப் பட்ட, அதே காலக்கட்டத்தில்தான், ஃபின்லாந்து கல்வித் துறையின் ஏனைய சீர்த்திருத் தங்கள் நடக்கலாயின.

பதையும் ஒரு 'ஸ்பை'யின் வாழ்க்கையோடு சொல்லி 'திடுக்'கிட வைத்திருக்கிறார். அதற்கான அவரின் விரிவான கள ஆய்வு, வசனங்களாகவும் காட்சிகளாகவும் வெளிப்படுகிறது.

தென்னாப்பிரிக்காவின் கேப்டவுன் மற்றும் பொலிவியா நாட்டில் ஏற்பட்ட தண்ணீர் பஞ்சம் குறித்த வரலாற்றைப் பார்வையாளர்களுக்கு அறிமுகப்படுத்தி, எச்சரிக்கை செய்திருப்பதைப் பாராட்டினாலும் கதையில் ஏராளமான விஷயங்களைத் திணிக்க முயன்றிருப்பது, உரிய தாக்கத்தை ஏற்படுத்தும் வகையில் திரைக்கதை அமைக்கப்படாதது, இரண்டாம் பாதியின் நீளம், தொக்கி நிற்கும் தர்க்கப் பிழைகள் ஆகியவற்றால்,'சர்தார்' தன் நோக்கத்தில் இருந்து தடுமாறி நிற்கிறது.

ஜாலியான காவல் ஆய்வாளர், சீரியஸான உளவாளி என 2 வேடங்களிலும் வித்தியாசம் காட்டி பிரம்மாதப்படுத்தி இருக்கிறார், கார்த்தி. ராஷி கன்னாவை விரட்டி விரட்டி காதலிப்பது, தேசத் துரோகியின் மகன் என்பதைக் கேட்டு அவமானப்படுவது என விஜய்பிரகாஷ் ஒரு பக்கம் நடிப்பில் இயல்பு காட்டினாலும் 'சர்தார்' பாத்திரத்தின் நடிப்பிலும் உடல் மொழியிலும் இதுவரை பார்க்காத கார்த்தி, பளிச்சென்று தெரிகிறார். அவருக்காக திலீப் சுப்பராயன் அமைத்திருக்கும் ஆக்‌ஷன் காட்சிகள் ஜில்லிட வைக்கின்றன. ஆனால், எவ்வளவுதான் பயிற்சிப் பெற்றாலும் கைகள் நடுங்கும் ஒருவர், இவ்வளவு வலிமையாக ஆக்‌ஷனில் ஈடுபட முடியுமா? என்கிற கேள்வியும் எழாமல் இல்லை.

தேசிய பாதுகாப்பு ஆலோசகராக இருந்து, தண்ணீர் மாஃபியாவாக மாறும் பேராசைக் கொண்ட ரத்தோர் கேரக்டரில் கச்சிதமாகப் பொருந்துகிறார், சங்கி பாண்டே. அவர் நடிப்பும் தோற்றமும் அந்த கேரக்டருக்கு நியாயம் சேர்க்கிறது. ஆனால் அவர்வசனங்களுக்கும் உதட்டசைவுக்கும் பொருத்தமே இல்லை.

வழக்கறிஞரான ராஷி கன்னாவுக்கு, கார்த்தியை காதலிப்பது, பின் அவருக்கு உதவுவதுதான் வேலை. ஆனால் மனதில் நிற்பது பிளாஷ்பேக்கில் வரும் ரஜிஷா விஷயன்தான். சின்ன சின்ன உடல் மொழியில் கவனம் ஈர்க்கிறார். நீண்ட காலத்துக்குப் பின் சமூக போராளியாக லைலாவைப் பார்ப்பது வித்தியாசமான அனுபவம்.

ஏஜென்ட்டுகள், கரப்பான்பூச்சி யூகி சேது, விக்டர் அவினாஷ், சித்தப்பா முனிஷ்காந்த், சிறுவன் ரித்விக், அரசியல்வாதி இளவரசு ஆகியோர் தங்கள் பாத்திரங்களில் சிறப்பாக ஒன்றி இருக்கிறார்கள். ஜார்ஜ் சி வில்லியம்சின் ஒளிப்பதிவும் ஜி.வி.பிரகாஷின் பின்னணி இசையும் கதைக்கு அதிகம் உதவி இருக்கின்றன.

உளவுத்துறை தொடர்பாக பல காட்சிகள் இருந்தாலும் அவற்றில் போதுமான சுவாரசியம் இல்லை. ஏகப்பட்ட கதாபாத்திரங்கள், உள்ளடி அரசியல் ஆகியவை வசனங்களாகவே கடந்து போகின்றன. அதைச் சரியாகப் புரிந்துகொள்வதே கடினமாக இருக்கிறது. இவற்றைச் சரி செய்திருந்தால் 'சர்தார்' இன்னும் ஈர்த்திருப்பான்.





# பிரின்ஸ்

## இடையிடையே சிரிக்கலாம்



ஆசிரியர் அன்பரசனுக்கும் (சிவகார்த்திகேயன்), அதே பாடசாலையின் ஆங்கில ஆசிரியை, பிரிட்டிஷ் பெண் ஜெசிகாவுக்கும் (மரியா) காதல். முற்போக்குச் சிந்தனை கொண்ட அன்பரசனின் தந்தை உலகநாதனுக்கு (சத்யராஜ்) பிரிட்டிஷ் என்றால் ஆகவே ஆகாது. அதற்கு அவர் காரணம் வைத்திருக்கிறார். ஜெசிகாவின் தந்தைக்கு இந்தியன் என்றாலே ஆகாது. அதற்கு இவரிடமும் இருக்கிறது காரணம். இவர்கள் மோதலால் அன்பு - ஜெசிகா காதல் என்னவாயிற்று என்பது தான் படம்.

எளிமையான திரைக் கதை, நகைச் சுவை கலந்து சொல்ல நினைத்திருக்கிறார் தெலுங்கு இயக்குநர் அனுதீப். அதற்கு நடுவில் மனிதநேயம், போர் இழப்பு, தேசப் பக்தி என்றால் என்ன என்பவறறையும் பக்கம் பக்கமாக வசனம் பேசி தமக்கும் சமூகப் பொறுப்பு இருக்கிறது என்றும் காட்ட முற்பட்டிருக்கிறார். இதில், பாட்டில்கார்ட் (bottlegourd) நகைச்சுவை, ஹியூமானிட்டி, சேர, சோழ பாண்டியன் விளக்கம், பாடசாலை மாணவர்களின் நகைச்சுவை உட்பட பல காட்சிகளுக்கு தியேட்டரில் சிரிப்புச் சத்தம் அலை மோதுகிறது, ஆனால், மொத்தப் படத்துக்குள்ளும் சில இடங்களில் மட்டுமே நகைச்சுவை கைகொடுத்திருப்பதும் கனதியான காட்சிகள்கூட, தொலைக்காட்சித் தொடர்ப போல தோன்றும் உருவாக்கத் தரம் பலவீனமாக இருப்பதும் இரண்டு மணிநேரம், கதையை நகர்த்த வலுவான அம்சம் ஏதும் இல்லாமல் இருப்பதும் திரைக்கதையை ஏகத்துக்கும் பலவீனமாக்கி இருக்கிறது.

'டான்' படத்தில் மாணவனாக வந்த சிவகார்த்திகேயன் இதில் ஆசிரியராக பதவியுயர்வு பெற்றிருக்கிறார். இந்தக் கதைக்கு எந்த மெனக்கெடலும் தேவையில்லை என்பதால், சட்டையை மாற்றிப் போட்டுவிட்டு வந்தது மாதிரி அப்படியே இருக்கிறார். ஜெசிகாவை

கண்டதுமே காதலில் விழுவதில் தொடங்கி, காதலுக்கு எதிரானவர்களைச் சமாளிப்பது வரை அவர் படும்பாடுதான் படம் என்பதால், தன் பாத்திரத்தை உள்வாங்கி நடித்திருக்கிறார். நடிப்பிலும் நடனத்திலும் வழக்கம் போல திறமை காட்டியிருக்கிறார்.

பிரிட்டிஷ் பெண் ஜெசிகாவாக உக்ரைன் நடிகை மரியா. வழக்கமான சினிமா காதலிகள் செய்யும் வேலையைத்தான் இவரும் செய்கிறார். எமோஷனல் காட்சிகளில், நடிப்பில் தடுமாறுகிறார். உலகநாதனாக சத்யராஜ். தனக்கு எல்லாம் தெரியும் என்று காட்டிக் கொள்ளும் பாத்திரம். சாதி, மத வேற்றுமைகளை மறுக்கும் முற்போக்காளரான அவர், பிரிட்டிஷார் மீது வெறுப்பைக் கொண்டிருப்பது அவருடைய கதாபாத்திர வடிவமைப்பிலோ முற்போக்கு சிந்தனைகளிலோ இயக்குநருக்குத் தெளிவில்லை என்பதையே காட்டுகிறது.

உள்ளூர் வில்லனாக பிரேம்ஜி அமரனை, நெகட்டிவ் கேரக்டரில் பார்க்க வித்தியாசமாகத்தான் இருக்கிறது. சிவாவின் நண்பர்களாக வரும் பாரத், பிராங்ஸ்டார் ராகுல், சதீஷ் ஆகியோர் சில இடங்களில் சிரிக்க வைக்கின்றனர். சிறிது நேரமே வந்தாலும் ஆனந்தராஜ் கிச்சு கிச்சு மூட்டுகிறார்.

தமனின் இசையில் 'ஜெசிகா', 'பிம்பிளிக்கு பிளாப்பி' பாடல்கள் ரசிக்க வைக்கின்றன. பின்னணி இசை கதையின் ஓட்டத்துக்கு உதவி இருக்கிறது. மனோஜ் பரமஹம்சாவின் ஒளிப்பதிவு, இல்லாத கதையோடு நம்மை இழுத்துச் செல்கிறது.

சமூக அறிவியல் ஆசிரியர் சிவகார்த்திகேயன், பாடசாலை நேரத்தில் சினிமாவுக்குச் செல்வது, எளிய வரலாற்றுத் தகவல்கள் கூடதெரியாமல் இருப்பது என பல வகைகளில்மாணவர்களுக்கு மோசமான முன்னுதாரணமாக இருப்பதுதான் நகைச்சுவை என்று நினைத்து தவறான முன்னுதாரணத்தை எடுத்து வைத்திருகிறார் இயக்குநர்.



# வங்கி பாதுகாப்புக்காக ஒரு நோபல்

வ.ர.சாரி




**இப்போது உலக அளவில் விலைவாசி உயர்வு, செலாவணி மதிப்புகளின் வீழ்ச்சி ஆகிய இரு பெரும் பிரச்சினைகள் வலுத்து வருவதால் இம்மூவரின் ஆய்வுகள் மாற்று ஏற்பாடுகளைச் செய்ய வழிகாட்டும் என்று பொருளாதார நிபுணர்கள் கூறுகின்றனர்**

பொருளாதாரத்தில் இந்த ஆண்டு அறிவிக்கப்பட்டுள்ள நோபல் விருதுகள் பல வகைகளில் வங்கிகளைப் பலப்படுத்த உதவும். அமெரிக்காவைச் சேர்ந்த மூன்று அறிஞர்களுக்கு இந்த ஆண்டுக்கான பொருளாதார நோபல் பரிசு அறிவிக்கப்பட்டுள்ளது. பென் எஸ். பிரனான்கி (68), டக்ளஸ் டபிள்யு. டயமண்ட் (68), பிலிப் எச். டிப்விக் (67).

வங்கிகள், நிதி நெருக்கடிகள் குறித்து இவர்கள் மேற்கொண்ட ஆய்வுகளுக்காகவும் அளித்த தீர்வுகளுக்காகவும் இந்த விருது வழங்கப்படுகிறது. இவர்களில் டக்ளஸ், சிகாகோ பல்கலைக்கழகத்திலும் பிலிப் டிப்விக், வாஷிங்டன் பல்கலைக்கழகத்திலும் பணியாற்றுகின்றனர். பிரனான்கி வாஷிங்டனில் உள்ள புரூக்கிங்ஸ் நிறுவனத்தில் பணிபுரிகிறார். மூவரில் பிரனான்கி 2006 முதல் 2014 வரையில் அமெரிக்க ஃபெடரல் வங்கித் தலைவராகப் பதவி வகித்தவர் என்பது ஆய்வுக்கு வலு சேர்த்தது.

**வங்கிகளின் நெருக்கடி**

1980களில் வங்கித் துறையில் ஏற்பட்ட நெருக்கடிகள் பிரச்சினைகள் குறித்து இவர்கள் மூவரும் விரிவாக ஆராய்ந்துள்ளனர். வங்கிகள் நொடிப்புக்குக் காரணங்கள் என்ன என்று எல்லாக் கோணங்களிலும் ஆராய்ந்தனர். திடீரென்று வங்கிகள் நொறுங்காமல் இருக்க, அமைப்பு ரீதியாகச் செய்ய வேண்டிய பாதுகாப்பு ஏற்பாடுகளையும் அவர்கள் பரிந்துரைத்துள்ளனர்.

இந்தப் பரிந்துரைகள் 2008, 2020 ஆண்டுகளில் நேரிடவிருந்த பெரும் ஆபத்தின் அபாய அளவைக் குறைத்தன. இந்த ஆண்டுகளில் வங்கிகள் வீழ்ச்சியடையாமல் தடுப்பதில் உதவின.

இவர்களுக்கான நோபல் பரிசு அறிவிப்பில், 'பொருளாதார வளர்ச்சியில் வங்கிகள் ஆற்றும் முக்கியப் பங்கு என்ன, வங்கிகள் மேற்கொள்ள வேண்டிய கட்டுப்பாட்டுகள் எப்படி அமைய வேண்டும், வங்கித் துறையில் ஏற்படும் நெருக்கடிகளுக்குக் காரணம் என்ன, அவற்றை எப்படித் தடுக்கலாம், நிதி நிர்வாகம் எப்படி இருக்க வேண்டும் என்பதை மேற்கொண்டு ஆராயவும் தீர்வுகளைக் காணவும் மூவருடைய பணிகளும் பெரிதும் உதவியதற்காக இந்த விருது வழங்கப்படுகிறது' என்று குறிப்பிட்டிருக்கிறது விருதுக்குழு.

**வதந்திகளும் திவால்களும்**

உலக வரலாற்றில் முக்கிய இடம் பிடித்த 1930களின் அமெரிக்கப் பொருளாதார பெருவீழ்ச்சி தொடர்பில் பென் பிரனான்கி ஆய்வு செய்திருக்கிறார். வதந்திகளால் வங்கிகள் செயலிழந்து மூடப்படுவது அதோடு முடிகிற விஷயமல்ல என்பதையும் வங்கிகளின் தோல்வி அடுத்து வரப்போகும் பொருளாதார நெருக்கடிக்கு மேலும் ஒரு காரணமாக அமையும் என்பதையும் சுட்டிக்காட்டினார் பிரனான்கி. வங்கித் துறையில் சமீப காலங்களில் அப்படியொரு வீழ்ச்சி ஏற்பட முடியாமல் அரசுகள் தடுப்பு நடவடிக்கைகளை எடுக்க இது கணிசமாக உதவியது.

இப்போது உலக அளவில் விலைவாசி உயர்வு, செலாவணி மதிப்புகளின் வீழ்ச்சி ஆகிய இரு பெரும் பிரச்சினைகள் வலுத்து வருவதால் இம்மூவரின் ஆய்வுகள் மாற்று ஏற்பாடுகளைச் செய்ய வழிகாட்டும் என்று

# திருந்திறதுக்கு ஏலுமோ?



கதிரேசன் காத்தவராயன்

விரதத்துக்கு மரக்கறியள் வேண்டுவமெண்டு சந்தைக்குப் போனன். இப்ப சந்தையள் எல்லாம் சுத்து மதிலோடையும் ஒண்டு ரண்டு படலையளோடையும்தானே இருக்குதுகள்... அதோடை கொஞ்சம் பெரிய சந்தையளைச் சுத்தி கடை கட்டடங்களும் இருக் கல்லே... கடையளுக்கு வாறவை சந்தைக்கு வாறவையெண்டு எல்லாற்றை சயிக்கிளுகளும் கண்டபடி நிண்டுதுகள்... ஓட்டோ வுகள் படியள் எண்டும் நிண்டுதுகள்... வழமையாய் இப்பிடி யான நேரங்களிலை போகாததாலை எனக்குப் புதினமாய்க் கிடந் துது.

'என்னப்பா கதிரேசு... வாகனப் பாதுகாப்புக் குத்தகையை எடுக்கப்போறியள் போலை வடிவாய் எண்ணுகிறியள்?' எண்ட குரலுக்குத் திரும்பினன். 'அட... கனகு...இப்ப எதாலை உள்ள டுகிறது எண்டல்லோ பாதை தேடுகிறன்... வழியை மறிச்சுக் கொண்டல்லே விட்டிருக்கிறாங்கள் வாகனங்களை...' எண்டு முடிக்கேல்லை 'இதுக்கும் ரிக்கற் தந்து காசு பிடுங்கிப்போடு வங்கள்... இதிலை இஞ்சை இன்னும் உந்த நடைமுறை வர யில்லை...' எண்டுகொண்டு முருகேசர் வந்தார்.

'ஏன் மீன் சந்தையிலை வாங்கிறாங்களல்லே? அங்கை ஒண்டு மில்லை.. நாங்களே கொண்டுபோய் விடவேணும்... வெளி யாலை வாறதெண்டால் வாசலிலை நிக்கிறவைக்கு காசு குடுக் கத்தான் வேணும்..' எண்டார் கனகர். 'நாங்களே விட்டு நாங் களே எடுக்கிறதெல்லாம் சரி... அங்கை வெய்யிலுக்கையும் மழைக்குள்ளையும்தான்... அநியாயக் காசு வசூல்தான்... ரிக்கற்றும் கிழிக்கிற மாதிரி இல்லை...' எண்டார் முருகேசர்.

'அதிலை நிக்கிறவை ஒரு ஒழுங்கு முறையிலை நிப்பாட்டுற தையாவது செய்யலாமல்லே?' எண்டன் நான். 'எங்கடையாக்கள்? சொன்னா உடனை வரிசையிலை விட்டிடுவினமல்லே!' எண்டு கோவத்தோடை சொல்லி நிப்பாட்டினார் முருகேசர். 'வாற

பொருளாதார நிபுணர்கள் கூறுகின்றனர்.

அமெரிக்காவின் வீடமைப்புச் சந்தையில் கடன் வாங்கி வீடு கட்டியவர்கள், வருமானம் போதாமையாலும் வேலையிழப்புகளாலும் வீட் டுக் கடன்களை அடைக்க முடியாமல் வாங்கிய வீடுகளைத் திரும்ப ஒப்படைக்க முன்வந்தபோது மிகப் பெரிய சிக்கலாக அது உருவெடுத்தது. வீடு கட்டுவதற்குக் கடன் கொடுத்த வங்கிகளுக் கும் நிதி நிறுவனங்களுக்கும் அது நெருக்கடியாக மாறியது. அப்போது அமெரிக்க பெடரல் அரசின் உதவியுடன், வங்கி - நிதித்துறைக்கு உதவிகளைச் செய்து, மீட்சிபெற வைத்தார் பிரனான்கி. ஆனால், லெம்மான் பிரதர்ஸ் வங்கி இதே போன்ற நெருக்கடியில் சிக்கியபோது அது மூழ்கட்டும் என்று பெடரல் வங்கியும் அரசும் அனுமதித்தன. பிரனான்கி அதில் முக்கியப் பங்கு வகித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

வங்கிகள் எப்படி உருவாகின்றன, வதந்திகள் காரணமாக மட்டும் அவை எப்படி திடீரென நொறுங்கிவிடுகின்றன, இப்படிப்பட்ட ஆபத்து கள் நேராமல் சமூகம் எப்படி அவற்றைத் தடுக் கலாம் என்று டக்ளஸ் டயமண்டும் பிலிப்பும் கருத் தியல் மாதிரிகளை உருவாக்கி விளக்கியுள்ளனர்.

**அரசின் வாக்குறுதி எனும் கவசம்**

வங்கிகள் வாடிக்கையாளர்களிடமிருந்து பெறும் ரொக்க முதலீடுகளுக்கு (டெபாசிட்டுக ளுக்கு), அரசு ஈடு நின்று காப்புறுதி அளித்தா லேயே முதலீட்டாளர்களுக்கு நம்பிக்கை வலுப்படும், வதந்திகளால் வங்கிகள் நொறுங்கும் ஆபத்து நேராது என்று விளக்கியுள்ளனர்.

வங்கியின் நிதி நிலைமை மோசமானாலும் நாம் செலுத்திய டெபாசிட்டுகள் திரும்பக் கிடைத்து விடும் - அதற்கு அரசு உத்தரவாதம் அளித்திருக் கிறது என்ற நம்பிக்கை வாடிக்கையாளர்களுக்கு ஏற்பட்டுவிட்டால், எப்படிப்பட்ட வதந்தியானா லும் உடனே கவலைப்பட்டு வங்கிகளுக்குப் போய் தங்களுடைய டெபாசிட்டுகளைத் திரும் பப் பெறுவதில் வேகம் காட்ட மாட்டார்கள் என்று அவர்கள் தெரிவிக்கின்றனர்.

தங்களுடைய சேமிப்புகளை வங்கிகளில் முதலீடு செய்யும் வாடிக்கையாளர்களுக்கும், தங் களுடைய தொழில் - வர்த்தகத்துக்குத் தேவை யான முதலீட்டைக் கடனாகப் பெற வரும் வாடிக் கையாளர்களுக்கும் இணைப்புப் பாலமாகச் செயல்படுபவை வங்கிகள். கடன் வாங்க விண் ணப்பித்தவர் நல்ல நோக்கத்துடன்தான் கடனுக் காக அணுகுகிறாரா, அவருடைய அனுபவம், திட்டம், தொழில் முயற்சி ஆகியவை நல்ல பலனைத் தருமா, கடன் கொடுத்தால் பயன் இருக் குமா, அவரால் திருப்பிச் செலுத்த முடியுமா என் பதையெல்லாம் மதிப்பிட வங்கிகளே சிறந்த அமைப்புகள் என்று டயமண்ட் விவரித்துள்ளார்.

பொருளாதார உலகில் நிகழும் நேரடியான பாதிப்புகளை ஆராய்ந்து அவற்றுக்குத் தீர்வுக ளைக் கண்ட அறிஞர்களுக்கு விருது வழங்கியி ருப்பது மிகவும் பாராட்டப்பட வேண்டியது என்று பலரும் வரவேற்றுள்ளனர்.

வாகனம் பிடிக்கிற பிறேக்கிலை எதிலை நிக்குதோ அதிலையே விட்டிட்டு இறங்கிப் போறதுதானே எங்கடையாக்களின்ரை பழக்கம்?' எண்டார் கனகர். உண்மைதானே?

'உங்கார் உதிலை நடுவிலை வாசலை மறிச்சு நிக்கிற வாகனத்தைப் பாருங்கோ வன்... உவை சாமான் இறக்குகிற வேகத் தைப் பாத்தால்... மதியத்துக்கு மேலை ஆகும்போலையல்லே கிடக்குது? அது வரைக்கும் ஆக்கள் போறதும் வாறதும் கஸ்ர மாயல்லே கிடக்குது?' எண்டு காட்டினார் முருகேசர். அதிலை பாத்தால் சங்கரியர் விட்ட சைக்கிளை எடுக்கேலாமலுக்கு வில்லண்டப்பட்டுக் கொண்டிருந்தார்.

'என்ன சங்கரியண்ணை? வாறதோ?' எண்டு கொண்டு அங்காலை நிண்டு தம்பர் போய் ஒரு மோட்டச் சைக்கிளை உருட்டப் பாத்தார். முடியேல்லை. 'ம்ம்.. விடுகிறது குறுக்கையாய் நடுவிலை... அதுக்கை கான் டில் லொக் வேறை' எண்டு தம்பர் சத்தமாச் சொல்ல 'சொன்னாலுமல்லே, ஆரும் கொண்டு போயிட்டால் பெறுமதி தெரியுமோ எண்டல்லே கேக்குதுகள்?' எண்டார் கடைக் காறர்.

'சரியாச் சொன்னீங்கள்...' எண்டபடி போய் அவைக்கு உதவி செய்தம். சங்கரியர் மட்டு மில்லை வேறையும் ரண்டு மூண்டு பேர் சந் தோசமாய் நாங்கள் விலத்திக் குடுத்த பாதை யாலை தங்கடை சைக்கிளுகளை எடுத்தி னம். 'இதுகளை ஒரு சீராய் விட்டு எடுத் தால் எல்லாருக்கும்தானே நல்லது.. சந்தைய ளிலை குத்தகையெடுக்கிறவை இதுகளை சீராக்கிறதையும் செய்யலாமில்லோ?' எண்டு அதிலை போன ஒராள் புறுபுறுத்ததிலை நியாயம் இருக்கல்லே?

'இது இஞ்சை சந்தையிலை உள்ள பிரச் சனையில்லை... யாழ்ப்பாணம் ரவுணுக்கை பாருங்கோவன்.... வாகனம் விட எடுக்க படுகிறபாடு.....' எண்டு கனகர் சலிப்பானார். 'அதிலை வலு சோக்கான விசயம் கடைய ளுக்கு முன்னாலை கத்திப்பாடாய் அடுக்கிக் கிடக்கிற சைக்கிளுகளுக்கு முன்னாலை ஓட்டோவையோ காரையோ ஏன் மோட்டச் சைக்கிளையோ குறுக்காலை விட்டிட்டு போறவையும் எங்கடையாக்கள்தானே?' எண்டார் முருகேசர்.

'எங்கையும் உதுதான்... எங்கடையாக் களுக்கு பழக்கவழக்கம் குறைவுதானே? அதோடை மற்றவையைப் பற்றி யோசிக்க வும் தெரியாதல்லே?' எண்டுகொண்டு சங்கரியர் வெளிக்கிட 'என்ன கதிரேசண்ணை கதையைக் காணேல்லை?' எண்டு தம்பர் என்னை இழுத்துது. 'சத்தம் போடாதை... உதிலை நிக்கிற உவ்வளவு மோட்டச் சைக் கிளுகளையும் என்னண்டு எடுப்பினமெண்டு பாரன்' எண்டன். 'எப்பிடி?' எண்டார் தம் பர். 'நாங்கள் இதிலை எங்கடை சைக்கிளுக ளோடை நிண்டால் அவை எதாலை வெளி யாலை வருவினம்?' எண்டுகொண்டு வீட்டை வந்திட்டன்.

ஐயங்கொண்டான் சுவாமிகள்

82

# எமையறிதல்



முன்கற்பிதங்கள் வழி கேள்விகளைக் கேட்கும்போது நாம் எம்மைத் திருப்திப்படுத்தும் விதமான பதில்களை எதிர் பார்க்கிறோம் என்பதிலும் ஒரு எதிர்பார்ப்பு அல்லது ஆசைதான் முன்னிலையில் நிற்கிறது. எண்ணம் செயல் போன்றன விரிந்து செல்வதற்கான எதிரியாக எதிர்பார்ப்பு அமைந்துவிடும் அபாய மானது எம்மையும் மீறியதாக அமைந்துவிடுகிறது. விதிவிலக்காக அமைந்த கேள்விகளே அறிவியலாக அமைந்திருக்கின்றன என் கிற யதார்த்தம் உணரப்படல் அவசியமானது.

முன்னர் பேசியது போன்று எதிர்பார்ப்பு என்பதே ஆசைதான். ஆசை நோக்கிய திசைபற்றியே எமது எண்ணங்கள் குவிகின்றன. குவிகிற எண்ணங்கள் (கவனம் அல்ல) செயலை விரிவாக்குமா? சுட்டிய திசைவழி அவசர பயணத்தைச் செய்யுமா? அவசர பய ணம் என்பது கவனந்தப்புவதற்கான வாய்ப்புகளையே அதிகமா கக் கொண்டிருக்கும் என்பது யதார்த்தம். ஆசை அல்லது அத னால் உண்டாக்கப்பட்ட அதற்கிணையான எதிர்பார்ப்பு ஒருபோ தும் திருப்தி என்கிற ஒரு புள்ளியை அடையாது.

அண்மிக்கலாம். ஆனால் அந்த இடத்திலிருந்து இன்னொரு சுவட்டில் எதிர்பார்ப்பு ஓடத்தொடங்கி விடுகிறது. ஆக அடைதல் என்பது சாத்தியமற்றுப்போகிறது. உறக்கம் ஒதுங்கிப்போகிறது. எமது அலைச்சல் நீள்கிறது. முன்னரே குறிப்பிட்டதைப் போல எதிர்பார்ப்பானது எப்போது ஓய்ந்தடங்குகிறதோ அப்போதிருந்து

## வரப்பிரகாஷ்...

களையப்பட்ட நிலையில் கடுமையான உடற்பயிற்சிகள் செய்யும்படி வரப்பிரகாஷ் கட்டாயப்படுத்தப்பட்டார் என்று சாட்சிகள் பதியப்பட்டிருக்கின்றன.

இத்தகைய பகிடிவதையால் தீவிர உட்காயங்களுக்கு உள் ளாகி சிறுநீரகம் செயலிழந்த வரப்பிரகாஷ் சில நாள்கள் சிகிச்சையின் பின்னர் வைத்தியசாலையில் உயிரிழந்தார். இதையடுத்து அவரைப் பகிடி வதைக்கு உள்ளாக்கினார்கள் என்று 8 மாணவர்கள் மீது காவல்துறையினர் வழக்குப் பதிவு செய்தனர்.

கண்டி நீதிவான் மன்றில் நடைபெற்ற சுருக்க முறையற்ற விசாரணையில் குற்றஞ்சாட்டப்பட்டவர்களில் ஐவர் விடு விக்கப்பட்டனர். மூவருக்கு எதிராக கண்டி மேல் நீதிமன் றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. நீண்ட விசாரணைக்குப் பின்னர் மற்றொருவருக்கு எதிராகவும் போதிய ஆதாரங்கள் இல்லை என்று விடுவிக்கப்பட்டார்.

சம்பவத்தின் முதல் குற்றவாளியான பாலேந்திரன் பிரசாத் சதீஸ்கரனும் மற்றொருவரும் இந்தக் கொலையில் குற்றவா ளிகள் என்று கண்டி மேல் நீதிமன்றம் தீர்ப்பளித்தது. இதில் சதீஸ்கரன் தொடக்கம் முதலே தலைமறைவாகி இருந்தார். அவர் வழக்கு விசாரணைகளுக்காக நீதிமன்றத்தில் முற்பட வில்லை. இரண்டாவது குற்றவாளிக்கு இந்தக் கொலையில் குறைந்தளவு பங்களிப்பே இருந்ததாகத் தெரிவித்து தண்டனை அறிவித்த நீதிமன்றம் 2014ஆம் ஆண்டு முதன்மைக் குற்றவாளியான சதீஸ்கரனுக்கு சாவுத் தண்டனை விதித்தது.

அதை எதிர்த்து சதீஸ்கரன் சார்பில் மேன் முறையீட்டு நீதி மன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை விசாரித்த நீதியரசர்கள் சம்பத் அபயகோன், பி.குமரரட்ணம் ஆகியோர் வெள்ளிக்கிழமை தீர்வு வழங்கினர். அதில் சதீஸ்கரனுக்கு எதிரான சாவுத் தண்டனையை அவர்கள் உறுதிப்படுத்தினர்.

பகிடிவதை என்ற பெயரில் கடுமையான உடற்பயிற்சியை செய்ய வற்புறுத்தியவர் அது ஆபத்தானது, இறப்பை ஏற் படுத்தக்கூடியது என்று நன்கு அறிந்து அதைச் செய்திரா விட்டால் இப்படிப்பட்ட கடுமையான உட்காயங்கள் ஏற்படும் என்று யாராலுமே நம்ப முடியாது என்று நீதியரசர்கள் தமது தீர்ப்பில் கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள்.

வரப்பிராஷின் உடற்கூறப் பரிசோதனை அறிக்கையில் கடுமையான உடல் பயிற்சியைத் தொடர்ந்து தசைக் காயம் காரணமாக ஏற்பட்ட கடுமையான சிறுநீரகச் செயலிழப்பு இறப்பிற்குக் காரணம் என சட்ட மருத்துவ அதிகாரி தெரிவித்திருந்தார். அதிக உடல் பயிற்சிக்கு உட்படுத்தப்பட்டதன் காரணமாகவே இறந்தவரின் உள் காயங்கள் ஏற்பட்டதாகவும் அவர் கருத்து தெரிவித்திருந்தார்.

வரப்பிரகாஷின் தந்தை சிவகுரு செல்வநாயகம் பிரகாஷன் ஒரு மருத்துவர். அவருடைய ஒரே மகன் வரப்பிரகாஷ். அவருக்கு ஒரு மகளும் இருக்கின்றார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அண்மைக் காலமாக பகிடிவதை அதிகரித்து, அதற்காக மாணவர்கள் கற்றல் செயற்பாடுகளில் இருந்து இடைநிறுத்தப்பட்டு வரும் நிலையில் இந்தத் தீர்ப்பும் வெளியாகி இருக்கின்றது.

திருப்தி உலவத் தன்னை உயிர்ப்பித்துக்கொள்கிறது. அப்படியாயின் எதிர்பார்ப்பென்பது தேவையற்ற ஒன்றா? என்கிற வினா கேட்கப்படலாம். நியா யமான வினாத்தான் அது.

எதிர்பார்ப்பு என்கிற ஒன்று இல்லையென்றால் நாம் இயங்கு நிலையில் இருப்பதற்கான வாய்ப் புகள் இல்லாது போய்விடலாம் என்பதும் மறுபுறத்து உண்மைதான். எதிர் பார்ப்பு என்பது எமது இலக்கு நோக்கிய செயல்முனைப்புக்கு உறுதுணையானது. அது அப்படி உறுதுணையாக இருக்க வேண்டுமாயின் எமது இயலுமைகள் எதிர் எதிர்பார்ப்பு என்பதற்கான சுயஉணர்வோடு இணைந்த ஒரு சுயமதிப்பீடு அவசியமானதாகிறது.

எந்தவொன்றும் எமக்கான இயலுமைகளிலி ருந்து கட்டியெழுப்பப்படுவது அவசியம். எதிர்பார்ப்பு, ஆசை என்பனவும் அவ்வாறே அமை வதுதான் நற்பயன் விளைவிக்கும். ஆசை, எதிர் பார்ப்பு என்பன எமக்கு வெளியேயானவற்றினது தூண்டுகையில் அல்லது அருட்டலில் எமக்குள் தோற்றுவிக்கப்படுவனவே என்பது கவனத்தில் இருப்பதவசியம். அவர் அப்படியிருக்கிறார் அவர் போலவே நானும் இருக்கவேண்டும் என்கிற எண் ணம் ஆசையாகிறது. அவர் எவ்வாறு அந்நிலைக்கு வந்தாரோ அதேபோல நானும் முய ன்று விளைவைப் பெறமுனைதல் எதிர்பார்ப்பு.

ஆசை தவறாகிறது. எதிர்பார்ப்பு வீணாகிறது. அவரும் நானும் ஒன்றல்ல. அவருக்கான இயலுமையும் சூழலும் எனக்கானவையல்ல. எனக்கா னவை அவருக்கானவையல்ல. எதிர்பார்ப்பு என்பது ஆசையினது மறுவடிவமெனப் பார்த்தோமே அதுதான். அதற்கு பொறுமையும் நிதானமும் இருப்பது அபூர்வமே. அப்படியிருப்பினும் பாவிக்கக்கூடிய நிலையினதாக இருக்காது. அவரைப்போல ஆதல் அவரைப்போலப் பெறுதல் என எனக்கு வெளியேயான ஒரு சட்டகத்துள் மூழ்கிக்கொள்கிறோம். அங்கு என்னதான் கிடைத்துவிடும்?

எனக்கானதை எனக்கு வெளியே பெறமுடியுமா? எனக்கானவை எனக்குள்ளேயே இருக்கின் றன என்பதை உணரத் தவறுகிற மனம் அலைகிறது. உடல் தொடரியக்கத்தில் துவண்டு ஓய்ந்து விடுகிறது. மனம் தன்னையும் வருத்திக் கொண்டு உடலையும் மோசமாக வருத்துகிறது. மனத்தினது எண்ணவழியும் தடுமாறி இயங்கு பொறியாகிய உடலும் ஓய்ந்து விழுகிற நிலையிலும் எனதான உடல் சார்ந்த இயலுமையை சரிவர கணித்துக்கொள்கி றோமா என்கிற வினாவை எழுப்பிப் பதில் தேடுகிறோமா?

உடலிற்குள்ளிருந்து ஐம்பொறிகள்வழி இயங்கு விசையைப் பெறுகிற மனம் உடலையும் பொறி களையும் ஆட்சி செய்கிற அற்புதம் எமக்குள்ளேதான் இருக்கிறது. இதுதான் எம்மால் சரிவரக் கணிப்பிட்டுக்கு உட்படுத்திக்கொள்ள முடியாத புதிராயும் இருக்கிறது. இந்தப் புதிரை விடு விப்பதுதான் எமக்கான வழிகளைத் திறப்பதாகவும் அமையும். புதிரை விடுவிப்பதற்கான வலு எம்மிட மிருக்கிறதா?

உடலின் இயக்கத்தை வழிப்படுத்துவது மனமா? (ஐம்பொறிகள் வழியான) ஐம்புலன்களா? அப்படியாயின் மனத்தை இயக்குவது எது? எவை? ஐம்புலன்களை உணர்வதும் இயக்குவதும் எது? எவை? இதுவும் கோழியா முட்டையா முதலில் உருவானது என்கிற வினாவைப்போலவே சிக்கலானது. சிந்திப்போம்.

இவ்விதழ் யாழ்ப்பாணம் இல. 551ஏ கஸ்தூரியார் வீதியிலுள்ள கிறீன் மீடியா கவுஸ் பிரை. லிமிட்டட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 29.10.2022 அன்று வெளியிடப்பட்டது. தொடர்பு :0214927781